பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 14 வியாழக்கிழமை (29-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:247

# இலங்கையில் தொடரும் வன்முறைகள் உக்கிரமற்ற போருக்கு வழிவகுக்கலாம்

## கொழும்பில் ஹெல்கிஸன் எச்சரிக்கை



கொழும்பு,ஜூலை29

**உடனடியாக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இப்போது இல்லை. அரசுக்கும் புலிகளுக்கும் இடையே நம்பகத்தன்மை குறைந்துள்ளது.**

**தற்போது இடம்பெற்றுவரும் வன்முறைகள் தொடர்ந்து நீடிக்குமானால் உக்கிரம் குறைந்த போர் ஒன்று உருவாகக்கூடிய நிலைமை உள்ளது.**

**- இவ்வாறு நேற்று கொழும்பில் எச்சரிக்கை செய்தார் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன்.**

கடந்த 25ஆம் திகதி இங்கு வருகைதந்த எரிக்சொல்ஹெய்ம், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சிறிய கட்சிகளின தலைவர்களையும் அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளையும் இங்கே சந்தித்துப் பேசியபின்னரே இக்கருத்தை வெளியிட்டார்.

நாடு திரும்பும் முன் நேற்று விடர் ஹெல்கிஸன் உள்ளூர், வெளியூர் செய்தி நிருபர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

இம்முறை எனது விஜயத்தின் பின் புதிதாக எதையும் சொல்வதற்கில்லை. முன்னரை விட அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான தூரம் அதிகரித்துள்ளது; நம்பகத்தன்மையும் குறைந்துள்ளது.

அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு நிலைமை கேள்விக்குறியாக இருக்கின்றது. அங்கு அமைதியான சுமுகநிலை ஏற்பட வேண்டும். இரு பக்கத்தாருமே இதில் பங்கு கொள்ள வேண்டும். இல்லையேல் அங்கு சுமுக நிலையை ஏற்படுத்தமுடியாது.

போர்நிறுத்த உடன்படிக்கை என்பது நடந்த யுத்தத்தை முடக்கிவைத்ததே தவிர அது இனப் பிரச்சினைக்கு ஒரு முடிவுகட்டவில்லை என்பதை இலங்கை மக்கள் பலர் உணர்ந்துள்ளனர்.

முடங்கியிருந்த யுத்தம் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக பலத்து வருகிறது. வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துவருகின்றன. குறிப்பாகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு புறநகர்ப் பகுதியில் கருணா ஆதரவாளர்கள் உள்ளிட்ட 8 பேர் சுட்டுக்கொல்லப்பட்டமை, இம்மாத முற்பகுதியில் கொழும்பில் நடந்த தற்கொலைத் தாக்குதல்கள் ஆகியவை உதாரணங்கள்.

முடங்கியுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடங்கும் முயற்சியில் நோர்வேத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஞாயிறன்று 'டியூசன்' நடத்த தடை வருகின்றது

கொழும்பு,ஜூலை29

ஞாயிறு விடுமுறை தினங்களில் அரசாங்கப் பாடசாலைகளிலோ அல்லது தனியார் கல்வி நிலையங்களிலோ வகுப்புகளையோ, தனிப்பட்ட டியூசன் வகுப்புகளையோ நடத்த முடியாது. அதற்குச் சட்டரீதியான தடை வருகிறது. இதற்கான அமைச்சரவை அனுமதியைக் கோரியுள்ளார் ஜே.வி.பியைச் சேர்ந்த - கலாசார, பாரம்பரிய தேசிய புலமைச்சான்றுகள் அமைச்சர் - விஜித்த ஹேரத்.

சகல பாடசாலை மாணவர்களுக்கும் கட்டாயமாக சமயபாட நல்வழிப் போதனைகள் வழங்கப்படவேண்டும். இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயப் பாடசாலைகள் ஞாயிறு தினங்களிலேயே நடைபெறுகின்றன.

இத்தினங்களில் தனியார் மற்றும் அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்கள் 'டியூசன்' வகுப்புகளை நடத்துவதால் மாணவர்கள் சமயப் பாட வகுப்புகளுக்குச் செல்ல முடியாத நிலை

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஹெல்கிஸனைச் சந்திப்பதற்கு ஜே.வி.பி., ஹெல உறுமய மறுப்பு!

## அக்கட்சிகளின் கொள்கைகள் இடங்கொடுக்கவில்லையாம்

கொழும்பு,ஜூலை29

இலங்கை வந்திருக்கும் நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், இலங்கை அரசின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பியுடனும மற்றும் சிங்களத் தீவிரப் போககுடைய ஜாதிக ஹெல உறுமயவுடனும் சந்தித்துப் பேச முயன்றார். எனினும், அது பலிக்கவில்லை.

அவரைச் சந்திக்காமல் சாக்குப் போக்குக் கூறி நாசூக்காகத் தவிர்த்துவிட்டன இக்கட்சிகள் இரண்டும்.

எனினும், நோர்வே அனுசரணையாளர்களைச் சந்தித்து மனம் திறந்து பேசுவதற்குத் தங்களின் கட்சிகளின் கொள்கைகள், கோட்பாடுகள், போக்குகள் இடங்கொடுக்காத காரணத்தினாலேயே தாங்கள் அப்படி நடந்து கொண்டனர் என இக்கட்சிகளின் மூத்த உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளுக்கு முன்னுரிமைகொடுக்கும் விதத்தில் இலங்கை சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுவதை ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் கடுமையாக எதிர்த்து வருகின்றன.

இதனால், இந்த அமைதி முயற்சிகளில் அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேத் தரப்புக்குறித்தும் அக்கட்சிகள் கடுப்புக்காட்டி வருகின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசும் அதன் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் நோர்வே அனுசரணையுடனான சமாதான முயற்சிகளைத் தாம் வரவேற்கிறார்கள் எனக் காட்டிக்கொண்டாலும், அரசின பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. அதைக் கடு

(14ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் உளவு விமானம் நோட்டம்

ஆளில்லா - உளவுபார்க்கும் - இரண்டு சிறிய வான் கலங்கள் நேற்று முற்பகல் முதல் மதியம்வரை சில மணிநேரம் முல்லைத்தீவு மாவட்டத்தின் மீது பறந்து நோட்டமிட்டுக்கொண்டிருந்தன என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. புலிகளின் பிரதேசத்தின்மீது அரச உளவு விமானங்கள் நோட்மிட்டுக் கண்காணிப்பது, யுத்த நிறுத்த மீறல்களாகக் கருதக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

### கிருஷாந்தி கொலைக் குற்றவாளியான

# ராஜபக்ஷவுக்கு நீண்டகால அவகாசம் வழங்குவதற்கு நீதிமன்றம் மறுப்பு

## ஆள்கொணர்வு வழக்கில் உத்தரவு

யாழ்ப்பாணம்,ஜூலை29

குடாநாட்டில் 1995 - 1996 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கைதாகிக் காணமாற்போனோர் தொடர்பான சில ஆள்கொணர்வு வழககுகளில் எதிர் மனுதாரர்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் இராணுவத்தின் முன்னாள் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ சார்பில் சட்டத்தரணியை நியமிக்க நீண்டகால அவகாசம் கோரப்பட்டது. அதை நீதிமன்றம் நிராகரித்தது.

அரியாலைப் பகுதியில் காணாமற்போன ஆறு பேர் தொடர்பான அவர்களது பாதுகாவலர்கள் ஆள்கொணர்வு வழங்குகளை யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளனர்.

இந்த வழக்குகள் மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.வரதராஜா முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டன.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியான

(14ஆம் பக்கம் பார்க்க)

# சிறையிலிருந்து ராஜபக்ஷவை திறந்துவிட்டாலும் தப்பமுடியாது

## அதற்கு வழியில்லை என நீதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை29

யாழ்.சிறைச்சாலையில் லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷவை வைத்திருப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. சிறைச்சாலைக் கதவைத் திறந்துவிட்டால் கூட அவர் போகமாட்டார். அவர் நீந்திப் போகவோ, வேறு மார்க்கமாகப் போகவோ வழியில்லை.

- இப்படிக் கூறினார் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா.

யாழ். மேல்நீதிமன்றத்தில் நேற்று நடந்த ஆள்கொணர்வு வழக்கு விசாரணையின் போதே அவர் இப்படிக் கூறினார்.

வழக்கு ஒத்திவைக்கப்பட்டதையடுத்து யாழ். சிறையில் பாதுகாப்பு இல்லை. இவரை வெலிக்கடைச் சிறைக்குத்தான் கொண்டுசெல்லவேண்டும் என்று சிறைச்சாலை அதிகாரி நீதிபதியிடம் தெரிவித்தார்.

அப்போதே நீதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### ஆள்கொணர்வு மனுக்கள்

# படை அதிகாரிகளுக்காக அரச சட்டவாதி ஆஜர்

யாழ்ப்பாணம்,ஜூலை29

குடாநாட்டில் 1995 -1996 ஆம் ஆண்டு காலப பகுதியில் கைதாகிக் காணாமற்போனோர் தொடர்பாகத் தாக்கல் செய்யப்புட்டுள்ள ஆட்கொணர்வு வழக்குகளில் எதிர்மனுக்காரர்களான படை அதிகாரிகள் சார்பில் அரச சட்டவாதி ஆஜராவார்.

யாழ். மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட எட்டு ஆட்கொணர்வு வழக்குகளில் சட்டமா அதிபரின் பணிப்பின் பேரில் படை அதிகாரிகள் சார்பில் தாம் ஆஜராகின்றமை தொடர்பான பதவியை (Proxy) அரச சட்டவாதி செல்வி சுகந்தி கந்தசாமி சமர்ப்பித்தார்.

கடந்த மாதம் இந்த வழக்குகள் எடுக்கப்பட்ட சமயம், எதிர்மனுதாரர்களான படை அதிகாரிகள் தமது பதிலைச் சமர்ப்பிப்பதற்கு - நேற்றுவரை - இறுதிச் சந்தர்ப்பத்தை யாழ்.மேல் நீதிமன்றம் வழங்கியிருந்தது.

அத்தோடு, சம்பந்தப்பட்ட படை அதிகாரிகள் தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜராவதற்குத்

(14ஆம் பக்கம் பார்க்க)

### ஆள்கொணர்வு மனு விசாரணை

# படை அதிகாரிகளுக்கு நீதிமன்றம் நோட்டீஸ்!

யாழ்ப்பாணம்,ஜூலை29

யாழ். குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டு, காணமற்போனவர்கள் தொடர்பாக ஆள்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகளுக்கு படையதிகாரிகளான எதிர் மனுதாரர்களை எதிர்வரும் 11 ஆம் திகதி நீதிமன்றத்தில ஆஜராகுமாறு யாழ். நிதீமன்றம் நேற்று நோட்டீஸ் பிறப்பித்துள்ளது.

யாழ். குடாநாட்டில் 1995, 1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணமற்போனவர்களில் கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்தவர்களான பெர்னாண்டோ ஜெயகாந்தன், மைக்கல் பேனாட் ஜோன்சன் மற்றும் அன்ரனி அனிஸ்ரன் ஆகியோர் தொடர்பான ஆள்கொணர்வு மனுக்கள் மேலதிக விசாரணைக்காக யாழ். மேல் நீதிமன்றத்தினால் யாழ். நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டிருந்தனர்.

இவை தொடர்பான விசாரணைகளே யாழ். நீதிமன்றத்தில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் நேற்று இடம்பெற்றன.

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஈராக்கில் கார்க் குண்டுவெடிப்பு: 68 பேர் பலி; பலர் படுகாயம்!!

பகுபா,ஜூலை29

ஈராக்கிலுள்ள பொலீஸ் நிலையமொன்றின் வெளியே இடம்பெற்ற கார்க் குண்டுவெடிப்பில் குறைந்தது 68 பேர் பலியாகியுள்ளனர்: டசின் கணக்கானவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இடைக்கால அரசு ஈராக்கின் இறைமையை ஏற்றுக்கொண்டு சரியாக ஒரு மாதமாகும் நேற்யைதினமே இத்தாக்குல் மேற்கொள்ளப்பட டுள் ளது.

தலைநகர் பக்தாத்தில் 65 கிலே மீற்றர் வட கிழக்கே உள்ள பகுபா நகரிலேயே இந்தக் கார்க் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தக் குண்டுத் தாக்குதலை நேரில் கண்ட நபரொருவர் இதுகுறித்துத் தகவல் தருகையில்:- காரொன்றை சனநடமாட்டம் நிறைந்த பகுதியான சந்தையொன்றில் செலுத்திவந்த தற்கொலைக் குண்டுதாரி, அங்கு குழுமியிருந்த பொலீஸாரின் அருகிலேயே இந்தக் கார்க குண்டினை வெடிக்கச் செய்தார். இதனால், 68 பேருக்கும் அதிகமானவர்கள் அந்த இடத்திலேயே துடிதுடித்து இறந்துபோயினர்.

பலருடைய உடலுறுப்புகள் வீதிகளில் சிதறிக் கிடந்தன. சந்தைப்பகுதி முழுவதும் இரத்த வெள்ளமாய்க் காட்சியளித்தது.

அந்தப் பகுதியில் வந்துகொண்டிருந்த மினி பஸ் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்டபோதே இக்கார்க்குண்டு வெடித்ததாக ஈராக் சுகாதார அமைச்சு கூறியுள்ளது. இந்த மினிபஸ்ஸில் பயணம் செய்த 21 பயணிகளும் உயிரிழந்தனர்.



உயிரிழந்தவர்களையும், காயமுற்றவர்களையும் மீட்புப் பணியாளர்கள் மீட்டுவருகின்றனர். காயமடைந்தவர்கள் அவசர அவசரமாக வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். அண்மைக்காலமாக ஈராக் பாதுகாப்புப் படையினர் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகி வருவது குறிப்பிடத்தக்கது.(க-8)

## பலஸ்தீனப் பிரதமர் இராஜினாமாவை வாபஸ்

ஜெருசலம்,ஜூலை29

பலஸ்தீனப் பிரதமர் அகமது குரையா, இரண்டு வார கால இழுபறிநிலைக்குப் பிறகு தனது ராஜினாமாக் கடிதத்தைத் திரும்பப் பெற்றுள்ளார்.

இந்த இழுபறி காரணமாகப் பலஸ்தீன அரசியல் பெரும் நெருக்கடிக்குள் சிக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்துப் பிரதமர் அகமது குரையா தகவல் தருகையில்:-

அதிபர் யசீர் அரபாத்துடன் இணைந்து செயலாற்ற விரும்புகிறேன்.

நாட்டில் நிலவிவந்த அரசியல் நெருக்கடிகள் இப்போது தீர்ந்துவிட்டன - என்றார்.

உலக அரங்கில்

பலஸ்தீன நிர்வாகத்தில் சீர்திருத்தம் வேண்டும் என்று தொடங்கிய எதிர்ப்புக் குரல்கள் வன்முறைமிக்க ஆர்ப்பாட்டங்களாக உருமாறியதையடுத்து, பத்து நாள்களுக்கு முன் குரையா தனது ராஜினாமாக் கடிதத்தைக் கொடுத்திருந்தார்.

ஆனால், அவரின் ராஜினாமாக் கடிதத்தை அதிபர் அரபாத் ஏற்கவில்லை.

(க-8)

## காஷ்மீர் துப்பாக்கிச் சண்டையில் 5 பொலீஸார் உட்பட 7 பேர் பலி!

காஷ்மீர்,ஜூலை29

இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் காஷ்மீர் எல்லைப் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் ஐந்து இந்தியப் பொலீஸ் அதிகாரிகள் உயிரிழந்தனர். பிரிவினைவாதிகள் என்று சந்தேகப்படும் இருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும், குறைந்தது ஆறு பொலீஸ் அதிகாரிகள் படுகாயமடைந்தனர். இத் தகவலை இந்திய நிர்வாக அதிகாரசபை அறிவித்துள்ளது.

ஸ்ரீநகர் மத்தியில் அமைந்துள்ள தல்லேக் என்ற இடத்திலேயே இந்தத் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றுள்ளது.

இந்தப் பகுதி சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரும் பிரதேசமாகும். இந்தத் துப்பாக்கிச் சண்டையால் உல்லாசப் பயணிகள் வருகை பாதிக்கப்படும் என உள்ளூர் செய்திகள் தெரிவிக்கின்றன.

தல்லேக் பகுதியில் அமைந்திருக்கும் ஹோட்டல் கட்டடத் தொகுதியின் மத்தியில் அமைந்திருக்கும் துணைப்பாதுகாப்பு அரணொன்றின் மீதே தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதல் பல மணிநேரம் நடைபெற்றதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர். தீவிரவாதிகள் பின்வாங்கும் வரை இந்தத் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றுள்ளது.

காஷ்மீரில் இயங்கும் அல்-மன்சூரியன் என்ற பிரிவினைவாத அமைப்பே இத்தாக்கு தலை நடத்தியிருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த சிப்பாய்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காஷ்மீரில் அமைதிக்காலம் நிலவும் இந்தக் காலப்பகுதியிலேயே தீவிரவாதிகளால் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

(க-8)

## ஈராக்கில் 12 இந்தியர்கள் நாடு திரும்ப முடியாது தவிப்பு!

பக்தாத், ஜூலை29

ஈராக் சிறையிலிருந்து மீட்கப்பட்ட 12 இந்தியர்கள் நாடு திரும்ப முடியாமல் பக்தாத்தில் உள்ள இந்தியத் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்கள், 12பேரும் சிரியாவிற்குள் நுழைந்த போது அந்நாட்டு பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர். ஒருநாள் முழுவதும் சிறையில் அடைக்கப்பட்ட இவர்களது பொருள்களை பொலீஸார் பறித்துக்கொண்டனர்.

பின்னர், இவர்களை மீண்டும் ஈராக் எல்லைக்குள்ள கொண்டுபோய்விட்டனர். ஈராக் எல்லைப் பகுதியில் நின்ற இவர்கள் தேசியப் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டு, இரண்டு மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

சிறைவாசம் அனுபவித்த இவர்கள், ஈராக்கிலுள்ள இந்தியத் தூதரகத்தால் மீட்கப்பட்டுள்ளனர். இவர்களைத் தாயகம் அனுப்பும் நடவடிக்கைகளில் தூதரக அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

வன்முறைகளால் பாதிப்படைந்துள்ள ஈராக்கில் வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளதால் பல முகவர் நிறுவனங்கள் வேலைபெற்றுத் தருவதாகக்கூறி மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

லெபனான், கிரீஸ் போன்ற நாடுகளில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறிப் பல இந்தியர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

(க-8)

## தலைநகர் பாதுகாப்புக்கென 3 விசேட பொலீஸ் குழுக்கள்

தலைநகர் கொழும்பின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் விதத்தில் 3 விசேட பிரிவுகளைக் கொண்ட பொலீஸ் குழுக்கள் களத்தில இறக்கபட்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் சிறிசேன ஹேரத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கும் இந்த குழுக்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்ட பொலீஸா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுப்பதற்கு என்றே உருவாக்கப்பட்டுள்ள இந்த மூன்று பிரிவுகளும் 24 மணி நேரமும் இயங்கக் கூடிய வகையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கடந்த வாரம் முப்படைகள் மற்றும் பொலீஸ் உயர் அதிகாரிகளைச் சந்தித்து மேற்கொண்ட கலந்தாலோசனைக்கு அமையவே இந்தப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதுதவிர, இராணுவப் புலனாய்வுப் பிரிவு மற்றும் பொலீஸ் புலனாய்வுப் பிரிவுகள் வழமை போன்று கொழும்பில் தமது கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

கொழும்பில் உள்ள லொட்ஜ்"க்களில் தங்கியிருப்போர் குறித்து விசேட அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றது.

கொழும்பில் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட லொட்ஜ்"க்கள் இயங்குகின்றன. இந்த லொட்ஜ்"க்களில் பொரும்பாலும் தமிழர்களே தங்கியுள்ளனர்.

மருதானைப் பகுதிகளிலுள்ள லொட்ஜ்"க்களில் தங்கியிருப்போர் பற்றிய விவரங்கள் கடந்த சில நாள்களில் பொலீஸாரால் திரட்டப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பின் பாதுகாப்பு மிகவும் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எந்தச் சவாலுக்கும் முகங்கொடுக்கும் வகையில் பாதுகாப்புப் படையினரும், பொலீஸாரும் தயாராகவுள்ளனர் - என்று பொலீஸ் தலைமையகம் தெரிவித்தது.

## பெண் தொழிலாளி குத்திக் கொலை!

பதுளை,ஜூலை29

பதுளை, தெல்பத்த தோட்டப்பெண் தொழிலாளி ஒருவர் நேற்றுக் கத்தியால் குத்திக் கோரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

எஸ்.தனலட்சுமி (வயது 51) என்பவரே இவவாறு கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இக்கொலை தொடர்பாக மேற்படி தோட்டத்தைச் சேர்ந்த மைக்கல் சந்தனம் என்பவரே சந்தேகத்தின் பேரில் பொலீஸார் கைதுசெய்ய முயன்றபோது, அவர் 'அசிட்' திரவத்தை அருந்தியதால், பதுளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். பதுளைப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## காலிக் கடலில் கப்பலில் தீ! 6 பேர் பலி; 18 பேர் காயம்

கொழும்பு,ஜூலை29

காலித் துறைமுகத்துக்கு அப்பால், கப்பல் ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் ஆறுபேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 18 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றிருக்கின்றபோதிலும், அது தொடர்பான தகவல்கள் இப்போதே வெளிவரத் தொடங்கியுள்ளன.

கப்பலில் இயந்திர அறையில் ஏற்பட்ட தீயே விபத்துக்குக் காரணமாக அமைந்திருக்கின்றது எனத் தெரிகிறது.

விபத்தில் உயிரிழந்த ஆறுபேரின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. இதன்போது மேலும் 18 பேர் காயமடைந்தனர்.

பிரித்தானியக் கப்பல் ஒன்று காயமடைந்தோரையும், ஏனையோரையும் காப்பாற்றிக் கரை சேர்த்திருக்கிறது எனவும் தெரிவிக்கப்பட்டது.

விபத்துக்குள்ளான கப்பல் சிங்கப்பூரில் தயாரிக்கப்பட்டது எனவும் அறியமுடிகின்றது.

(ஐ-ச

## பிரயோக அரங்கு குறித்து இன்று கருத்தரங்கு



ஜேம்ஸ் தோம்சன்

யாழ்ப்பாணம்,ஜூலை29

பிரயோக அரங்கு என் [illegible] தரங்கு ஒன்றை இங்கி [illegible] பல்கலைக்கழக நாடகத்துறை விரிவுரையா [illegible] ஜேம்ஸ் தொம்சன் இன்று மாலை 4 மணிக்கு நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடத்துகிறார்.

யாழ்செயல்திறன் அரங்க இயக்கம் ஒழுங்கு செய்துள்ள இக்கருத்தரங்கில் பிரயோக அரங்கு என்றால்என்ன? பிரயோக அரங்கில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் எவை? நியம அரங்கிற்கும் பிரயோக அரங்கிற்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் என்ன? அரங்கை எங்கெல்லாம் பிரயோகிக்கலாம். பிரயோக அரங்கச் செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடியவர்களிடம் வேண்டப்படும் தகைமைகள், வழங்கப்பட வேண்டிய பயிற்சிகள், தமிழ் அரங்கில் பிரயோக அரங்கச் செயற்பாடுகள் எவ்வாறு காணப்படுகின்றன போன்ற விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளன. தமிழ் மொழிபெயர்ப்புடன் நடைபெறும் இக்கருத்தரங்கில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (8-6)

| கொழும்பு பங்குப் பரிவர்த்தனை<br>பங்குச் சந்தைப் புள்ளிவிவரங்கள் | இன்று | முந்திய நாள் | புள்ளி மாற்றம் | %மாற்றம் |
|---|---|---|---|---|
| அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) | 1444.63 | 1442.55 | 2.08 | 0.14 |
| மிலங்கா விலைச்சுட்டி (MPI) | 2176.04 | 2172.77 | 3.27 | 0.15 |
| மொத்த வருவாய்ச்சுட்டி (TRI) | | | | |
| ASTRI - அனைத்துப் பங்குகள் | 1492.67 | 1490.58 | 2.14 | 0.14 |
| MTRI - மிலங்கா பங்குகள் | 2258.45 | 2255.06 | 3.39 | 0.15 |
| சந்தைப்புரள்வு (மில்லியன் ரூபாயில்) | 388.1 | 516.3 | | |
| கைமாற்றப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்லியனில்) | 36.5 | 31.1 | | |
| மொத்தக் கொடுக்கல் வாங்கல் | 5186 | 4665 | | |
| சந்தை மூலதனம் (பில்லியன் ரூபாயில்) | 353.7 | 353.2 | | |

உதயன்

## மக்கள் எதிர்பார்ப்பும் பொருத்தமற்ற அறிவிப்பும்

"வட்டுக்கோட்டைக்கு வழி எது என்று கேட்டால் 'துட்டுக்கு ரெண்டு கொட்டைப் பாக்கு!' எனப் பதில் தந்தானாம்" - என்ற பழைய பேச்சு வழக்கு ஒன்று உண்டு. எதையோ கேட்க, வேறு எதையோ பற்றிப் பதில் கூறு வதைத்தான் இப்படிக் குத்தலாகச் சுட்டிக் காட்டுவர்.

இலங்கைக்கு விஜயஞ்செய்த நோர்வேப் பிரதி வெளி விவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸனுடனான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சந்திப்பை அடுத்து ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையைப் பார்க்கும் போது இந்தக் 'குத்தல் மொழி'தான் நினைவுக்கு வருகின்றது.

அமைதிப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும் விவகாரம் ஒரேயொரு விடயத்தில்தான் சிக்கிப் போய் நிற்கின்றது என்பது அனைவருக்கும் தெரிந்த பரகசியம்.

பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முக்கிய அடிப்படைகளாக நான்கு விடயங்களைத் தமிழர் தரப்பின் ஏகப் பிரதிநிதிகளான புலிகள் முன்வைத்திருக்கின்றனர்.

புலிகளே ஈழத்தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை ஏற்று, பேச்சுக்களில் அரசுத் தரப்புக்கு சம அந்தஸ்துடையவர்களாக அவர்களை அங்கீகரித்து, அவர்களுடன் மட்டும் பேசவேண்டும். அதுவும் வடக்கு - கிழக்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்தே முதலில் பேசவேண்டும். அது பற்றிப் பேசி ஒரு முடிவெடுத்து, அந்த முடிவை நடைமுறைப்படுத்திக் கொண்டு இறுதித் தீர்வு குறித்துப் பேசலாம் என்பதே புலிகள் பேச்சுக்கு அடிப்படையாகக் குறிப்பிட்ட விடயங்களாகும்.

இதில்கூட, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை விடயத்தைத் தவிர ஏனையவற்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு ஏற்றுவிட்டது!

ஆக, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை பற்றிய பேச்சுத்தான் சர்ச்சைக்குரியதாக உள்ளது.

அதில்கூட, அவ்விடயம் குறித்துப் பேசவும் தயார் என்கிறது அரசு. ஆனால், இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசும் அதேசமயம், இறுதித்தீர்வு பற்றிய பேச்சுக்களையும் மறுபுறத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்கிறது அரசு.

ஆனால், புலிகளோ இடைக்கால நிர்வாகம் பற்றிய விடயத்தைப் பேசி, ஒரு முடிவெடுத்து, அதை நடைமுறைப்படுத்திய பின்னரே ஏனைய விவகாரங்கள் பற்றிய பேச்சு என்று ஒரே விடாப்பிடியாக நிற்கின்றார்கள்.

இதற்கு - இந்த இழுபறிக்கு - என்ன தீர்வு என்பதே இன்றைய கேள்வி.

பிரச்சினைக்குத் தீர்வுகாண - சிக்கலை அவிழ்க்க - அனுசரணையாளர்களான நோர்வே என்ன செய்யப் போகின்றது என்பதைத்தான் எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், அனுசரணைப் பணியில் முன்னிலை வகிக்கும் விடர் ஹெல்கிஸன் வந்தும் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்து மட்டுமே பேசவேண்டும் என்ற புலிகளின் வற்புறுத்தலுக்கு அரசுத் தரப்பு என்ன பதில் தரப்போகின்றது என்பதை அறியக் காத்திருந்த மக்களுக்கு ஹெல்கிஸனுடனான ஜனாதிபதியின் பிந்திய சந்திப்புக் குறித்து அறிக்கை வெளியிட்ட ஜனாதிபதி செயலகம், 'வட்டுக் கோட்டைக்கு வழிசொன்ன' குத்தல்கதைப் பாணியில் பதில் தந்திருக்கின்றது.

"ஐக்கிய இலங்கைக்குள் இடைக்கால நிர்வாக சபை குறித்துப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கவும், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காண்பதற்கும் அரசு தயார் என ஜனாதிபதி நோர்வே அனுசரணையாளர்களிடம் தெரிவித்தார்" - என்று ஜனாதிபதி செயலக அறிக்கை கூறுகின்றது.

எல்லோருக்கும் தெரிந்த சங்கதியை மீண்டும் அரைத்திருக்கின்றது ஜனாதிபதி செயலகம்.

இடைக்கால நிர்வாகம் குறித்து புலிகளுடன் பேச ஜனாதிபதி தயார் என்பது அனைவருக்கும் தெரிந்த சங்கதிதான். ஆனால், இடைக்கால நிர்வாகம் குறித்து மட்டும் முதலில் பேச ஜனாதிபதி தயாரா என்பதுதான் அனைவருக்கும் தெரியவேண்டிய விவகாரமாக இருந்தது. மக்களும் ஏனையோரும் அறிய ஆவலாக இருந்த விடயமும் அதுதான்.

அந்தக் கேள்விக்குத் திட்டவட்டமான ஒரு பதிலைத் தராமல் 'ஐக்கிய இலங்கைக்குள் இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசத் தயார்!' என்று பழைய பல்லவியைப் பாடியதன் மூலம் இந்தச் சமாதான முயற்சிகள் நிச்சயமற்ற நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன என்பதைக் கோடிகாட்டியிருக்கின்றது ஜனாதிபதி செயலகம்.

சமாதான முயற்சிகள் தொடர்பாகத் தீர்க்கமான - திட்டவட்டமான - ஒரு முடிவை எடுக்காமல், காலததை இழுத்தடித்து, அதன் மூலம் தனது கூட்டாட்சியைக் கொண்டிழுக்கும் ஜனாதிபதியின் தந்திரோபாயம் நீண்ட காலம் தாக்குப்பிடிக்குமா?

இப்படி அமைதி முயற்சிகளை முன்னும் நகர்த்தாமல், கையும் விடாமல் 'இரண்டாங்கெட்டான்' நிலையில் வைத்திருக்கும் எத்தனம் என்ன விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றதோ?

காலம்தான் பதில் கூறவேண்டும்.

# ஜனாதிபதி - ஜே.வி.பி. இடையில் அமைச்சு விவகாரத்தில் மீண்டும் முறுகல்

கொழும்பு,ஜூலை29

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பிக்கும் இடையில் மீண்டும் முறுகல்நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

ஜே.வி.பி. வசமிருந்த விவசாய, நீர்ப்பாசன அமைச்சின் கீழ் அடங்கும் நான்கு முக்கிய துறைகளை மைத்திரிபால சிறிசேனாவிடம் உள்ள ஆற்றுப்படுக்கை அபிவிருத்தி அமைச்சின்கீழ்க் கொண்டுவந்துள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் அறிவித்திருந்தார்.

இவ்வாறு முன்னறிவித்தலின்றி கடநத 12ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் அமைச்சுப் பொறுப்புக்களை அதிரடியாக மாற்றம் செய்ததை அடுத்தே இந்த முறுகல்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சுப் பொறுப்புக்களைத் திடீரென மாற்றம் செய்தமைக்குத் தமது அதிருப்தியைத் தெரிவித்து ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பொறுப்புக்களை முன்னறிவித்தல் ஏதுமின்றி மாற்றம் செய்தமை சர்ச்சைகுரிய விடயமாகும். எனவே, இதுபற்றி விவாதிப்பதற்கும், அவற்றைத் தீர்ப்பதற்கும் நேரம் ஒதுக்கித் தரப்படும் என நாம் நம்புகிறோம்.

அமைச்சுக்களின் பொறுப்புக்களை இவ்வாறு மாற்றிக்கொண்டிருப்பது நாட்டை அபிவிருத்தி நோக்கி இட்டுச்செல்லும் பணிக்கு ஆரோக்கியமானதல்ல - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியின் ஆரம்பத்தில் மகாவலி விவகாரத்திலும் இத்தகையதொரு சர்ச்சை எழுந்ததை ரில்வின் சில்வா தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-201)

# வருடாந்த ஆடிவேல் பவனி திங்களன்று ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்,ஜூலை29

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம் வருடந்தோறும் நடத்தும் ஆடிவேல் பவனி எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மூன்று தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் இவ்வீதியுலா பருத்தித்துறை வீதிவழியாக முற்பகல் 11மணிக்கு நல்லூர் வீரமாகாளி அம்பாள் ஆலயத்தைச் சென்றடையும். அங்கிருந்து பிற்பகல் ஒரு மணிக்குப் புறப்படும் பவனி யாழ்நகரின் அனைத்து வீதிகளினூடாகவும் சென்று மாலை 6.30 மணிக்கு வண்ணார் பண்ணை சிவன்கோயிலை வந்தடையும்.

இரவுத்தங்கலை அடுத்து மறுநாள் காலை 8 மணிக்கு அங்கிருந்து புறப்படும் ஆடிவேல் பவனி காங்கேசன்துறை வீதி வழியாக நண்பகல் 12 மணிக்கு வண்ணை நாச்சிமார் அம்மன் ஆலயத்தைச் சென்றடைந்து அங்கிருந்து 4 மணிக்குப் புறப்பட்டு மாலை 6 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பகுதி முருகன் ஆலயத்தைச் சென்றடைந்து அன்று இரவு முழுவதும் அங்கேயே தரித்துநிற்கும்.

இறுதி நாளான புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு திருநெல்வேலி ஊடாக அரசடி சிவகாம சுந்தரி அம்மன் ஆலயத்தை நண்பகல் 12 மணிக்கு சென்றடையும். மாலை 5 மணிக்கு அங்கிருந்து ஆரம்பமாகி கல்வியங்காடு வீதி வழியாக மாலை 7 மணிக்கு ஆலயத்தை ஆடிவேல் பவனி வந்தடைந்ததும் வீதியுலா நிறைவடையும்.

இந்த வீதியுலா நிகழ்வுகளில் அனைத்து பக்த அடியார்களையும் கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (எ-5)

## அபிவிருத்திப் பணிகளில் புலிகள் முக்கியதரப்பு

கொழும்பு,ஜூலை29

வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகள் தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்போதும் விடுதலைப் புலிகளை முக்கிய தரப்பாக உலக வங்கி கருதுகின்றது.

உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வாண்டு முன்னெடுக்கப்படவேண்டிய திட்டங்கள் குறித்த அறிக்கையின் தமிழ்ப் பிரதியை உலக வங்கி விடுதலைப் புலிகளுக்கு அனுப்பியதை கண்டித்து தேசப பற்றுள்ள தேசிய இயக்கம் உலக வங்கிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருநதது.

இந்தக் கடிதத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே பீற்றர் ஹரோல்ட் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உலக வங்கி அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கும்போது இலங்கைக்கு உதவி வழங்கும் திட்டங்களுடன் தொடர்புடைய அனைவருடனும் கலந்துரையாடும். இதற்கான அதிகாரம் எமக்கு உண்டு.

மேலும் விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு நேரடியாக நிதியுதவி வழங்கப்படுவதில்லை. மத்திய அரசினூடாகவே இவை வழங்கப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-201)

## கூட்டுறவுதின விழா

யாழ்ப்பாணம்,ஜூலை29

ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் ஏற்பாடுசெய்துள்ள கூட்டுறவுதின விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஊர்காவற்றுறை புனித மரியாள் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுளது.

சங்கத் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சிவனேசன், தமிழீழ நிர்வாக சேவையின் மாவட்டப் பொறுப்பாளர் கி.விஜிதரன், ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் ஆகியோர் கலந்துகொள்வர். (எ-201-204)

## அறநெறி மாணவர்களுக்கு இறுதிப் பரீட்சை

கொழும்பு,ஜூலை29

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த மேற பிரிவு மாணவர்களுக்கென இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் இறுதிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பத்தாம் தரத்தில் சித்தி பெற்றுப் பதினொராம் தரத்தில் கல்வியை மேற்கொள்பவர்களும், ஏற்கனவே இப்பரீட்சையில் தோற்றிச் சித்தியெய்தாதவர்களும் பரீட்சைக்கு விண்ணப்பிக்கமுடியும் என்று இந்து கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பப் படிவங்கள் அடுத்த மாதம் 17ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும் என்று -

பதிவுசெய்யப்பட்ட அறநெறிப் பாடசாலையொன்றினூடாகவே இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சை தொடர்பான விவரங்கள் கடந்த 16ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (எ-201)

## அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தை புனரமைக்க லண்டனில் இருந்து நிதி

தெல்லிப்பழை,ஜூலை29

அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தை மீளப்புனரமைத்து விசாலமாக்குவதற்கான நிதியினை வழங்க லண்டனில் இயங்கிவரும் அளவெட்டி மக்கள் சங்கம் முன்வந்துள்ளது.

அளவெட்டி மகாஜன சபையின் தலைவர் வை.சுப்பிரமணியம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அளவெட்டி மகாஜனசபை மண்டபம் அளவெட்டி மக்களின் பொதுத்தேவைகளுக்கான ஒரு மையமாக செயற்பட்டுவருகிறது. மேலும் அளவெட்டி மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு நிலையமாகவும் இது இயங்கிவருகிறது.

1942இல் அமைக்கப்பட்ட இம்மண்டபம் வலி.வடக்கில் கடந்த காலங்களில் நிகழ்ந்த யுத்த அனர்த்தங்களின்போது பலத்த சேதமடைந்தது.

இம் மண்டபத்தைப் புனரமைத்து சீரமைப்பது தொடர்பான கூட்டம் அண்மையில் மேற்படி மண்டபத்தில் நடைபெற்றபோது அளவெட்டியிலுள்ள பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது மண்டபப் புனரமைப்புத் தொடர்பாக ஆராயப்பட்டது. அப்போது கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த லண்டனில் இயங்கும் அளவெட்டி மக்கள் சங்கப் பிரதிநிதிகள் மேற்படி மண்டபப் புனரமைப்பிற்கான நிதியை வழங்குவதாக உத்தரவாதமளித்தனர். - என்று அவர் கூறினார். (எ-150)

## உள்ளூர் மூலப்பொருள்களைப் பயன்படுத்தி வெற்றிலைக்கேணியில் வீடமைப்புப் பணிகள்

வடமராட்சிகிழக்கு,ஜூலை29

வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணியில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டத்தின் வீடுகளை அப்பகுதியில் காணப்படும் மூலப்பொருள்களைப் பயன்படுத்தியே அப்பகுதி மக்கள் நிர்மாணித்து வருகின்றனர்.

அபபகுதியில் காணப்படும் ஊரிக்கல், மணல் ஆகியவற்றைப் பயன்படுத்தியே கட்டடவேலைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொழும்புத்துறை, அரியாலை ஆகிய இடங்களில் வீடமைப்பதற்குத் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளை, அதிகாரிகள் அண்மையில் வெற்றிலைக்கேணிக்கு அழைத்துச்சென்று, உள்ளூர் உற்பத்திப் பொருள்களைக்கொண்டு, மக்கள் பங்களிபபுடன் மேற்கொள்ளப்படும் வீடமைப்பு வேலைகளைக் காண்பித்து ஆலோசனை வழங்கினார்கள். (எ-182)

### நாளை

ஆடி 15
வெள்ளிக்கிழமை
(30.07.2004)
திதி : சதுர்த்தசி
பின்னிரவு 2.46 வரை.
நட்சத்திரம் : பூராடம்
மாலை 6.11 வரை.
சுபநேரம்: 6.03 - 7.33
ராகுகாலம்: 10.33 - 12.03
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

எதையும் சொல்வதை விடச் செய்வதே மேல்.

## காட்டுப்புலத்தில் மருத்துவ முகாம்

வலி.மேற்கு,ஜூலை29

சுழிபுரம், காட்டுப்புலத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை இலவச மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி. மேற்குப் பிரதேச சபையினால் நடத்தப்படவுள்ள இந்த இலவச மருத்துவ முகாமிலும், சுகாதார விழிப்புணர்வு நிகழ்விலும் சுழிபுரம், காட்டுப்புல மக்களைக் கலந்து பயன்பெறுமாறு பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் அறிவித்துள்ளார். (எ-175)

# பட்டரிகள்




வானொலி மற்றும் டோர்ச் பட்டரிகள்

மீண்டும் ஜார்ச் செய்யக்கூடிய சீல்ட் லீட்-அசிட் பட்டரிகள்

கைக்கடிகாரம்,கெமரா,செவிக்கருவி, கல்குலேட்டர்,விளையாட்டு பொருள் மற்றும் ரிமோட் கொன்ரோல்களுக்கான பட்டரிகள் மற்றும் பட்டன் செல்கள்.

கோர்ட்லஸ் மற்றும் கையடக்க தொலைபேசிகள், லப்டப்ஸ், வீடியோ கெமரா மற்றும் மின் உபகரணங்களுக்கான Ni-cd, Ni-MH & Li-ion பட்டரிகள் மற்றும் பட்டரி பொதிகள்

மெக்நெட் செல்ஸ் பிரைவட் லிமிட்டெட்.
பட்டரி துறையில் முன்னோடிகள்

தலைமை காரியாலயம் : #7,மாயா அவென்யூ,கொழும்பு 06 தொலைபேசி : 2591456 பக்ஸ் : 2584755
காட்சியறை லக்கி ப்ளாசா,செண்ட் அந்தனீஸ் மாவத்தை,கொழும்பு 03 தொலைபேசி : 2574875

Tradlanka Advertising


# திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் சனியன்று திருமுறைப் பெருவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை29

அகில இலங்கைத் திருமுறை மன்றம், சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபையினரின் அனுசரணையுடன் நடத்தும் திருமுறைப் பெருவிழா நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 7 மணிமுதல் சாநதையர் மடம் கற்பகவிநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பவற்றுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில், காலை 8 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்திலிருந்து திருமுறைச் சுவடி தாங்கிய வீதியுலா ஆரம்பமாகும்.

தொடர்ந்து முற்பகல் 10மணிக்கு திருமுறைச் சுவடிகளுக்கு சோடசோபசார பூசை இடம்பெறும்.

பின்னர் யாழ். நாவலர் மகாவித்தியாலயம், கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், கொழும்புத்துறை மேற்கு மன்றுளாடும் விநாயகர் ஆலயம், அகில இலங்கைத் திருமுறை மன்றம் ஆகிய மாணவர்களின் திருமுறைப் பாராயணம் இடம்பெறும்.

அகில இலங்கைத் திருமுறை மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெறும் அரங்க நிகழ்வில், பண்ணிசைப்புலவர் வேலுப்பிள்ளை சிவஞானம் 'திருமுறை இசைவல்லாளர்' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார். இதில் சைவப்புலவர் சு.செல்லத்துரை பாராட்டுரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து 'அகத்தியர் தேவாரத் திரட்டு' என்னும் நூல் வெளியீடு இடம்பெறும். யாழ். சத்திரத்துச் சந்தி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பரிபாலன சபைத் தலைவரும் பசுக்கள், இடபங்கள் பாதுகாப்பு இணைய அமைப்பாளருமான சிவநெறிப் புரவலர் கு.கங்கைவேணியன் நூலை வெளியிட்டு வைப்பார். முதற்பிரதியை ஊர்காவற்றுறை செருத்தனைப்பதி ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய அறங்காவலர் சிவத்திரு து.சிவஞானச்செல்வன் பெற்றுக்கொள்வார்.

சிறப்புரையை இந்துசமய அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் நிகழ்த்துவார். (எ-5)

# மானிப்பாய்ச் சந்தையின் முன்பாக பெரும் போக்குவரத்து நெருக்கடி

நவாலி,ஜூலை29

மானிப்பாய் பொதுச்சந்தையின் முன்பாகவுள்ள பிரதான வீதியில் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

வீதியின் இருமருங்கிலும் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பாரிய வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. அத்துடன் நடைபாதை வியாபாரிகளும் பொருள்களைப் பரப்பி விற்பனை செய்கின்றனர்.

இதனால், பஸ்கள் உட்பட ஏனைய வாகனங்கள் எதிர் எதிரே வரும்போது ஒன்றையொன்று விலத்திச் செல்ல முடியாதவாறு நீண்டநேரம் காத்திருப்பதைக் காணமுடிகிறது.

(எ-100)

# விசேட அறிவித்தல்

1) யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் 01-08-2004 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
2) பல்கலைக்கழக மாணவர்களுக்கு விசேடமாகக் கடன் கொள்வனவிற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான ஒழுங்கு விற்பனை நிலையத்தில் செய்யப்பட்டுள்ளது.
3) பாடசாலைகள், நூல்நிலையங்கள், சனசமூக நிலையங்களுக்கும் கடன் கொள்வனவிற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வணிக மாணவர் மன்றம்
யாழ்.பல்கலைக்கழகம்

(சி-36611)(21-13-17)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 598 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 27-07-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. 4828242-4843582 |

வெற்றி இலக்கங்கள்
01 33 48 51

லக்கினம் மிதுனம்

ஜக்பொட் பரிசு ரூபா.46,85,450/- வெல்லப்படவில்லை.
இந்த வெள்ளிக்கிழமை ஜக்பொட் ரூபா. 54,47,150/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,40,902 | 10/- | 34,09,020/- |
| 2.இலக்கங்கள் | 31,334 | 20/- | 6,26,680/- |
| 1.இல + லக்கினம் | 31,157 | 30/- | 9,34,710/- |
| 2.இல + லக்கினம் | 2,834 | 100/- | 2,83,400/- |
| 3.இலக்கங்கள் | 851 | 500/- | 4,25,500/- |
| 3.இல + லக்கினம் | 62 | 5,000/- | 3,10,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 46,85,450/- | - |
| மொத்தம் | 4,07,144 | - | 63,8[illegible]310/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 63,89,310/-

தொடர் இல. 5805550 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூலை 30ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4842522-9-25
4829925-5-10
4830517-0-05
4841638-6-65
4830263-7-64


# நூல்வெளியீடும் பரிசளிப்பும்

மக்கள் வங்கியின் சங்கானைக் கிளையின் அனுசரணையுடன் சங்கானைக் கோட்ட அதிபா சங்கம் வெளியிடும் 'புலமைப் பரிசில் வழிகாட்டி' நூல் வெளியீட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

சங்கானைக் கல்விக்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ரெஜினா இருதயநாதனும் சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் மு.க.சிவபாதவிருதயர், உதவிப் பிராந்திய முகாமையாளர் க. ஆனந்தராசா, சங்கானைக் கிளையின் முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளை ஆகியோரும் கலந்துகொள்வர்.

புலமைப் பரிசில் பரீட்சைக்கு முன்னோடியாக நடத்தப்பட்ட முன்னோடிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுக்கு இந்தவிழாவில் வைத்துப் பரிசில்கள் வழங்கப்படும்.(எ-7-29)

# நினைவில் நீங்கா ஓராண்டு நினைவலைகள்



திருமதி
## சிவசுப்பிரமணியம் சிவக்கொழுந்து

தாயின் மடியில் 21-08-1940
இறைவன் அடியில் 24-06-2003

திதி: 29-07-2004

வாழ்வின் கலங்கரை விளக்காய்
வையகத்தில் வந்துதித்த எம் அம்மாவே!
வாழ்வில் மாண்புடன் வாழ்வுதனில் வழிகாட்டி
சிறப்புடன் வாழ்வதற்கு நல்ல வழி வகுத்தவரே!
பிள்ளைகளை வளர்ப்பதில் ~ தாயாய்
பேரப்பிள்ளைகளை வளர்ப்பதில் ~ பேர்த்தியாய்
உறவுகளுக்கெல்லாம் வாழ வழிகாட்டியவளே!
உற்றார் உறவினருடன் அன்பும் பாசமாய் இருந்தவளே!
எல்லோரையும் தவிக்கவிட்டு எங்கு நீ சென்றாய்?

- குடும்பத்தினர்,

தற்காலிக முகவரி:
69,சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

நிரந்தர முகவரி:
திண்ணபுரம் சிவன்கோயிலடி,
காரைநகர்.

(C/36609)(42-21-13-17)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் : 07 - 02 - 1954
மறைவு : 30 - 06 - 2004

அமரர்
## கலாநிதி மகாதேவா ஸ்கந்தராஜா M.Sc. Ph.D (Alberta)CANADA
[சிரேஷ்ட விரிவுரையாளர், கணித. புள்ளி விபரவியல்துறை, யாழ் / பல்கலைக்கழகம்]

பொங்கி வரும் பெருநிலவே புத்தமுதே
தங்க நிகர்த் தாரகையே மாம்பழமே
துங்க முயர்ப் புலமை மிக்கோய்
பங்கப் பிறைசூடி யான்திருக் கழற்கீழ்
பங்கயமே நின்ஆன்மா சாந்தி பெறவே
எங்கள் அஞ்சலிகள் நினைப்போம் உனையே!

கேணிக்கரை ஒழுங்கை,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

-குடும்பத்தினர்.

(34653)

# முத்தமிழ் விழா

ஏழாலை,ஜூலை29

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் தமிழ்மன்றம் நடத்தும் முத்தமிழ் விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஒறேற்றர் சுப்பிரமணியம் மண்டபத்தில் மன்றத் தலைவர் செல்வன் சுகபிலன தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.வடக்குப் பிரதேச செயலர் கலாநிதி க.குணராசாவும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ரெஜினா இருதயநாதனும், கௌரவ விருந்தினராக இளைப்பாறிய உப்புக் கூட்டுத்தாபன முகாமையாளர் திருநீராமநாதனும் கலந்துகொள்வர்.

ஆசியுரையினை பாடசாலை அதிபர் க. சிவாஜியும், வாழ்த்துரையினை ஆசிரியர் ஆறு.திருமுருகனும் நிகழ்த்துவர். தொடர்ந்து கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (எ-7-45)

# கண்ணீர் அஞ்சலி



அமரர்
## குலபதி ஆறுமுகம் கந்தையா (J.P)

மறைந்தது தமிழும் சைவமுமா
கூட மனிதமுமே!

துயருறும் குடும்பத்தாரின் துக்கத்தில் நாமும் பங்குகொள்வதுடன், எமது அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆன்மா சாந்தியடைய ஸ்ரீ துர்க்காவின் பாதங்களில் பிரார்த்திக்கின்றோம்.

துர்க்கா பொத்தகச் சோலை

(21-13-17) நீதினி முகவர் தபாலகம் ~ சுன்னாகம் (சி-36608)

# பல்கலைக்கழக பதிவாளரின் கடமைகள் அடுத்த நிலையினரிடம் பகிர்ந்தளிப்பு

யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டதை அடுத்து அந்தப் பதவியை ஏற்க அடுத்த நிலையில் உள்ள எவருமே முன்வரவில்லை. இதனால் பதிவாளரின் கடமைகளைப் பரவலாக்கியுள்ளோம்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


நிதி மோசடி தொடர்பான விசாரணைக்காக - பேரவையின் தீர்மானப்படி - பல்கலைக்கழகப் பதிவாளர் தற்காலிகமாக சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார். அவரது இடத்துக்கு இதுவரை புதியவர் நியமிக்கப்படவில்லை.

இது குறித்து துணைவேந்தர் தெரிவித்ததாவது:-

பதிவாளரை இடைநிறுத்திய பின்னர் அந்தப் பதவியை ஏற்கும்படி சிரேஷ்ட மற்றும் உதவிப் பதிவாளர்களைக் கேட்டிருந்தோம். எவரும் பதில் பதிவாளர் பதவியை ஏற்க முன்வரவில்லை.

இதன் காரணமாக பதிவாளர் மேற்கொண்ட பணிகளை சிரேஷ்ட மற்றும் உதவிப் பதிவாளர்களிடம் பகிர்ந்து வழங்கியுள்ளோம். துணைவேந்தர் ஊடாக அவாகள் அந்தப் பணிகளை செவ்வனவே நிறைவேற்றி வருகின்றனர் - என்று துணைவேந்தர் தெரிவித்தார்.

பதிவாளரைச் சேவையில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தியமைக்கான காரணங்கள் அடங்கிய குற்றப்பத்திரிகை பதிவாளருக்கு அனுப்பப்பட்டது அவர் அதற்குப் பதில் அளித்துள்ளார். அந்தப் பதிவை விசாரணைக்குழு ஆராய்ந்து வருகின்றது. அக்குழு தனது அறிக்கையைப் பேரவைக்குச் சமர்ப்பிக்கும் என்றும் துணைவேந்தர் கூறினார். (ஐ-3)



நன்றி: ராவய

# 'அழகெழல்' போட்டியின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,ஜுலை29

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றத்தால் கடந்த 24ஆம், 25ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட "அழகெழல்" - 2004 கலைத்துறைசார் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்கள்,பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:

**சித்திரம் - தரம் 4, 5**

முதலாம் இடம் - ச.சிவ்மிந்தன் (யாழ்/ சென்ஜோன்ஸ் கல்லூரி), 2ஆம் இடம் - மா. சோனுஜா (உசன் இராமநாதன் ம.வி), 3ஆம் இடம் - ம.இனியாள் (தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி).

**பாராட்டுச் சின்னங்கள் பெறுவோர்**

பெடினேசன் - (யாழ்புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), சி.சிவகணேசன் (இணுவில் மத்திய கல்லூரி), மு.விதுன் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை).

**சான்றிதழ் பெறுவோர்**

க.அனித்தா (நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்), து.கௌசிகா (திருநெல்வேலி றோ.க.த.க பாடசாலை), ஜெனித்தா (சில்லாலை றோ.க.த.க.பாடசாலை), நி.அஜந்தன் (தொல்புரம் அமெரிக்கன் த.க.பாடசாலை).

**தரம் 6,7,8**

முதலாம் இடம் - து.தணிகைக்குமரன் (உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்), 2ஆம் இடம் - சி.கௌசல்யன் (யா/சென்ஜோன்ஸ் கல்லூரி), 3ஆம் இடம் - வி.சாரதாதேவி (யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை).

**பாராட்டுச் சின்னங்கள் பெறுவோர்**

சி.பிரதீபா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), சி. விசாளன் (ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி), கு.தர்சிகா (யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

**சான்றிதழ் பெறுவோர்**

டெ.அரோஜினி (ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் வித்தியாலயம்), இ.டர்சன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), வ.மாதுகா (தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை ம.வி), சு.ஜீவாஸ்கரன் (கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்).

**தரம் 9,10,11**

1ஆம் இடம் - கு.ராகுலன் (குப்பிளான் விக்கினேஸ்வரா ம.வி), 2ஆம் இடம் - அ.ஜோன் ஜிப்பிரின்னோ (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), 3ஆம் இடம் - செ.பிரகாஸ் (ஹாட்லிக் கல்லூரி), கு.குஜேந்தி (ஊர்காவற்றுறை புனித மகளிர் வித்தியாலயம்).

**சிறப்புச் சின்னமும் சான்றிதழும் பெறுவோர்**

ரா.சுதர்சன் (நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்), கி.தேவதீசன் (காரைநகர் கலாநிதி ஆ. தியாகராஜா ம.வி.), யே.மொறின் கொன் செப்ரா (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை).

**சான்றிதழ் பெறுவோர்**

யோ.நிரோஜினி (யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலை), ச.அபிராமி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ச.சர்மலா (பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை), வி. ஸ்ரீவித்தகன் (யாழ் இந்துக் கல்லூரி).

**தரம் 12,13**

முதலாம் இடம் - த.தஜேந்திரன் (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), 2ஆம் இடம் - ர.சுதன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), 3ஆம் இடம் - மு.நிசாளினி (யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி), க.சுஜே (சாவகச்சேரி இந்துக்கல்லூரி).

**சிறப்புச்சின்னமும் சான்றிதழும் பெறுவோர்**

து.நிசாந்தன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), ப. அஜிவன் (யாழ்.மத்திய கல்லூரி), ஜோ.காமல் (யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலை).

**சான்றிதழ் பெறுவோர்**

ம.துளசிகா (யாழ்.இராமநாதன் கல்லூரி), இ.ஆரணி (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை), தி.தயாளினி (கொக்குவில் இந்துக்கல்லூரி), க.குமரன் (ஹாட்லிக்கல்லூரி).

**ஆசிரியர்களுக்கான ஓவியப்போட்டி முடிவுகள்**

முதலாம் இடம் - செ.சிறலோகநாதன் (யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி), 2ஆம் இடம் - ம. சுதேஸ் (கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), 3ஆம் இடம் - எம். யசீமியாத் (யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி), க.தவதாசன் (புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி).

**சிறப்புச் சின்னமும் சான்றிதழும் பெறுவோர்**

த.மாலினி (புற்றளை ம.வி.) நா.இராஜன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), தி.தீபன் (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**சான்றிதழ் பெறுவோர்**

கே.பிரபாகரன் (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), து.திலீப்குமார் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), அ.அன்றன் கிறேசியன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி) கி.நிறஞ்சன் (மூளாய் சைவப்பிரகாச வித்தியாலம்), திருமதி அ.அருமைநாதன் இணுவில் இந்துக்கல்லூரி),

**சிறுவர் நாடகம்**

(முதலாம் இடம் - (நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை, அச்செழு சைவப்பிரகாச விததியாலயம்), 3ஆம் இடம் (நவாலி மகாவித்தியாலயம்).

**பாராட்டுச் சின்னமும் சான்றிதழும் பெறுவோர்**

கரவெட்டி ஞானாசிரியார் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, பண்டத்தரிப்பு, இந்துக்கல்லூரி.

**தனி நடிப்பு**

(முதலாம் இடம் பா.எட்வேட் சுஜீபன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), 2ஆம் இடம் இ. ஸ்ராலின் (பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி), 3 ஆம் இடம் சா.சந்துரு (யாழ்.சென்ஜோன்ஸ் கல லூரி),

**சிறப்புச் சின்னமும் சான்றிதழும் பெறுவோர்**

ஜெ.வைஸ்ணவி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), சி.சிவதாரணி (சுன்னாகம் இராமநாதன் கல்லூரி), யோ.அன்ரனி விமல்ராஜ் (சில்லாலை றோ.க.).

**பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்**

செ.அகல்யா (மல்லாகம் ம.வி.), யோ.யாழினி (பண்டத்தரிப்பு உயர்தரப் பாடசாலை), தபர்வினி (பண்டத்தரிப்பு உயர்தரப் பாடசாலை), மறிசோனா (நல்லூர் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை).

**கிராமிய நாடனம்**

முதலாம் இடம் (யாழ்.இந்து மகளிர் ஆரமப பாடசாலை), 2ஆம் இடம் (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி), 3ஆம் இடம் (கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்).

**சிறப்புச் சின்னமும் சான்றிதழும் பெறும் பாடசாலைகள்**

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, யாழ்.புனித பெனடிக் வித்தியாலயம், சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.

**சான்றிதழுக்குரிய பாடசாலைகள்**

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம். மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, இணுவில் மத்திய கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.

**கிராமிய இசை அபிநயப் பாடல்**

முதலாம் இடம் - யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, 2ஆம் இடம் - யாழ்.சென்ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம், 3ஆம் இடம் - மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம்.

**சிறப்புச் சின்னமும் சான்றிதழும் பெறுவோர்**

நாவாந்துறை றோ.க.வி., யாழ்.திருக் குடும்பக் கன்னியர் மட பாடசாலை, நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலை.

**பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்**

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் த.க. பாடசாலை, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, நலலூர் காசிப்பிள்ளை ம.வி, யாழ்.பெரியபுலம்ம.வி.

இவற்றுக்கான பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும்.

மேற்படி நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (10-201)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜுலை29

யாழ்.சர்வோதயத்தினால் நடத்தப்படுகின்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஒன்று அடுத்தமாதம் 11ஆம் திகதி யாழ். சர்வோதயத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சர்வோதயத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் என்.ஸ்ரீமனோகரன் கேட்டுள்ளார்.(எ-7)

## வீதிகள் புனரமைப்பு

நவாலி,ஜுலை29

நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாதிருந்த நவாலி தேவாலய பிரதான வீதி, ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதி என்பன தற்போது புனரமைக்கப்பட்டுள்ளன.

(எ-100)

# ஐக்கிய இலங்கைக்குள் இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேச அரசு தயார்

## ஹெல்கிஸனிடம் ஜனாதிபதி தெரிவித்தார்

கொழும்பு,ஜுலை29

ஐக்கிய இலங்கைக்குள் இடைக்கால நிர்வாக சபை குறித்துப் பேசுவதற்கும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கும் அரசு தயாராக இருக்கின்றது.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே அனுசரணையாளர்களிடம் தெரிவித்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு கடந்த ஞாயிறன்று கொழும்புக்கு வருகை தந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் செவ்வாய்க்கிழமை மாலை ஜனாதிபதி குமாரதுங்கவைச் சந்தித்தார். அதற்கு முதல்நாள் அவர் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தியிருந்தார்.

தமிழ்ச்செல்வனுடன் நடத்திய பேச்சுக்கள தொடர்பாக ஹெல்கிஸன் ஜனாதிபதிக்கு விளக்கமளித்தார்.

ஐக்கிய இலங்கைக்குள் இடைக்கால நிர்வாக சபை குறித்து மீண்டும் பேச்சுகளை ஆரம்பிக்கவும், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கும் அரசு தயாராக இருப்பதாக ஜனாதிபதி அப்போது சுட்டிக்காட்டினார்.

இதனடிப்படையில் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவிப்பார்கள் என்றும் ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் ஹெல்கிஸனுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்புக் குறித்து பின்னர் ஜனாதிபதி செயலகம் அறிக்கை ஒன்றை விடுத்தது.

இந்தச் சந்திப்பின்போது போர்நிறுத்த உடன்பாடு தொடர்பாக அரசின் உறுதிப்பாட்டை மீண்டும் வெளியிட்ட ஜனாதிபதி, அண்மைக்கால வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்தார் என்று அநத அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஐ)

## முதன்மை ஆசிரியர் பணிக்கு விண்ணப்பம்

தென்மராட்சி,ஜுலை29

தென்மராட்சி கல்வி வலயத்தில் வெற்றிடமாக உள்ள பின்வரும் முதன்மை ஆசிரியர் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வர்த்தகமும் கணக்கியலும், விவசாயம், சித்திரம், சங்கீதம், விசேட கல்வி, வழிகாட்டலும், ஆலோசனை வழங்கலும், இரண்டாம் மொழி (சிங்களம்) ஆகிய பாடங்களுக்கே முதன்மை ஆசிரியர்களை நியமிக்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முதன்மை ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் தமது விண்ணப்பங்களை அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம் என வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (எ-117)

# டெங்கு பரவுவதைத் தடுக்க சுதுமலையில் ஏற்பாடுகள்

நவாலி,ஜுலை29

சுதுமலை, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி பகுதிகளைச் சேர்ந்த இருவர் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருப்பதை அடுத்தே சுகாதார நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் அறிவுறுத்தல்களுக்கிணங்க வீதிகள் மற்றும் பொது இடங்களில் சிரமதானங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுகாதாரத் தொண்டர்கள் வீடுவீடாகச் சென்று இவை குறித்து பிரசாரம் செய்துவருகின்றனர். அத்துடன், குடியிருப்பில்லாத காணிகளில் வளர்ந்திருக்கும் பற்றைகளை அகற்றும்படியும் இவர்கள் அறிவுறுத்தி வருகின்றனர். (எ-100)

# சாயி சிந்தனை

## அன்புக்குப் பேதமில்லை



இக்கால மனிதனுக்கு அன்பு என்றால் என்ன என்று தெரியாது.. தான் ஆசைப்படுவது அன்பு என்று நினைக்கிறான். தனது ஆர்வங்களை அன்பு என்று நினைக்கிறான். தான் விரும்புவதை அன்பு என்று நினைக்கிறான். இவை அன்பு அல்ல. அன்புக்கு விருப்பு வெறுப்புகள் இல்லை. அன்பு தன்னலமற்றது. அது பிரதியுபகாரம் எதையும் எதிர்பார்ப்பதில்லை. அது, பரந்து விரிவது அது நட்பு, பகைமை இவற்றைக் கடநதது. இது உலகியல் சம்பந்தமானது. அன்பு இதற்கும் ஆன்மீக, அன்பிற்கும் சம்பந்தம் இல்லை. ஆன்மீக அன்புக்கு எத்தகைய எல்லையும், வரம்பும் இல்லை. அது யாரையும் வெறுப்பதில்லை. ஆகவே அது தடங்கலில்லாமல் வெகுதூரம் பரவிச் செல்வது. ஆசை, வெறுப்பு, பேராசை, மயக்கம், அகந்தை, பொறாமை இவை இருக்குமிடங்களில் தெய்வீக அன்பு சென்று பரவவேண்டும். அதுவே உண்மை. தெய்வத்துவத்திற்கு முக்கிய காரணம் ஆகும்.

மனிதன் தெய்வீகமாக மாறுவதற்கும், தெய்வத்துவத்தை அனுபவிப்பதற்கும், மனிதத்தன்மையைக் கடந்திருக்கவேண்டும் என்று எண்ணுகிறார்கள். அது சரியல்ல. பிரேமை மனிதனின் ஆளுகைக்கு உட்பட்டது. அது மனிதனுக்கு இயல்பானது. அது மனிதனின் சொத்து. அனபு மனிதத்தன்மையைக் கடந்ததல்ல. அது புதிதாகச் சம்பாதிக்கவேண்டுவதல்ல. ஆனால், நாம்தான் அன்பைத் தவறான வழியில்செலுத்தி ரூப நாமங்களில் சிக்கிக்கொள்கிறோம். தவறு அன்பின்மேல் அல்ல. அன்பைச் செலுத்தும் முறையில்தான் உள்ளது. கோபத்தை அன்பாக மாற்றிக்கொள்ளவேண்டும். வெறுப்பை அன்பாக மாற்றவேண்டும். இவற்றை அன்பாக மாற்றுவதற்கு இதயம் அன்பால் நிரம்பியிருக்கவேண்டும். இதயம் அன்பால் நிரமபியபின் சர்வமும் அன்புமயம் ஆகிவிடும்.

*(ஆதாரம்: சனாதனசாரதி)*

# குடாக் கடற்பரப்பில் புதிய சாளை இன மீன்


கடந்த 14.04.2004 தொடக்கம் இன்று வரை யாழ். மாவட்ட சந்தைகளில் மீன்களின் தொகையிலும் அதன் விலைகளிலும் நுகர்வோரின் விருப்பு வெறுப்பிலும் பல மாற்றங்கள் நடைபெற்று வருவது யாவரும் அறிந்தது. இந்த வகையில் குறிப்பாக யாழ்.குடாக்கடலில் முன்னெப்பொழுதும் இல்லாத அளவில் ஒரு குறிப்பிட்ட மீன் இனம் பிடிபடுவதே இதற்குக் காரணமாகும்.




| | |
|---|---|
| இனப்பெயர் | Amblygaster Sirm |
| ஆங்கிலப் பெயர் | Spotied Sardinella |
| தமிழ்ப் பெயர் | கீரிமீன் |
| சிங்களப் பெயர் | கொரம்புறு |
| அதிகூடிய நீளம் | 25 cm |
| நிறம் முதுகுப்புறம் | கருமை(நீலம்) |
| நிறம் வயிற்றுப்புறம் | வெள்ளிநிறம் |

இந்த மீனினம் பற்றிய சில குறிப்புகள் வருமாறு:-

இந்த மீன் வகையானது ONE WORD சாதி வகையைச் சார்ந்தது. இச்சாதி வகையில் கீரிமீன, சாளை மீன், சூடைமீன் என்பன அடங்கும். இந்த மீன்கள் கடலில் மேல் தளத்தில் கூட்டம் கூட்டமாக பருவகாலத்திற்கு இடம் பெயரும் தன்மையைக் கொண்டவை என்பதை இதன் நிறம், செட்டையின் அளவு, செட்டைகளின் விருத்தித் தன்மைகளைக் கொண்டு இனங்காணக் கூடியதாக உள்ளது. மேலும் இந்த இனமீன்களின் பூக்களின் (சுவாசம்) வடிவமைப்பிலும் வற்றின் குடலின் நீளத்திலும் அதன் வாய் அமைப்பிலுமிருந்து இவை ஒரு தாவர உண்ணியாகும் என இனங்காணமுடிகிறது.





| | |
|---|---|
| இனப்பெயர் | Sardinella Gibbosa |
| ஆங்கிலப் பெயர் | Gold Striped sardinella |
| தமிழ்ப் பெயர் | மட்டைசாளை |
| சிங்களப்பெயர் | சாலையா |
| அதிகூடிய நீளம் | 17 cm |
| நிறம் முதுகுப்புறம் | நீலம் நீலம் கலந்த பச்சை |
| நிறம் வயிற்றுப்புறம் | வெள்ளிநிறம் |

இந்த வகையில் தற்போது பிடிபடும் சாளை இனமீனானது சூடை, கீரிமீன் இனத்திலிருந்து வேறுபட்ட உடல் அமைப்பையும் வடிவத்தையும் கொண்டுள்ளது.

## திடீர் பெருக்கத்தால் — சந்தை நிலையில் மாற்றம்

இந்த மீனினமானது தென்மேல்பருவப் பெயர்ச்சிக் காலங்களில் இலங்கையில் ஆழ்கடலை அண்டியுள்ள கரைப்பிரதேசங்களில் கரைவலை, வழிச்சல் வலைகளில் பெரும் தொகையாக பிடிபடுவது உண்டு. இவை அப்பிரதேசங்களின் வசதிக்கேற்றவாறு சந்தைப்படுத்தப்படுகின்றன அல்லது பனிக்கட்டி இட்டு மலை நாடுகளுக்குச் கொண்டு செல்லப்படுகின்றன. அலலதுயாடி மீன் தயாரிப்பிற்கு உட்படுத்தப்படுகின்றன. அல்லது கருவாடாக்கப்படுகின்றன. இவற்றைக் குடாநாட்டில் மீனவர்களே பிரதேசத்திற்கு ஏற்ற வகையிலும் பிடிபடும் பருமனுக்கு ஏற்றவகையிலும் வியாபாரிகளின் சந்தைப்படுத்தலுக்கு ஏற்றவகையிலும் பல புனைபெயர்களையும் சந்தர்ப்பவாதப் பெயர்களையும் கொண்டு அழைப்பர்.

1.தொண்டன் சாளை
2.கொந்தன் சாளை
3.பேய்ச்சாளை
4.நுணலை
5.ஓணான் சாளை என்பன வாகும்.




| | |
|---|---|
| இனப்பெயர் | Sardinella Albella |
| ஆங்கிலப் பெயர் | White Sardinella |
| தமிழ்ப் பெயர் | வெண்சூடை |
| சிங்களப்பெயர் | சூடையா |
| அதிகூடிய நீளம் | 14 cm |
| நிறம் முதுகுப்புறம் | பச்சை |
| நிறம் வயிற்றுப் புறம் | வெள்ளிநிறம் |

ஆனால், இம் முறை இம்மீனின மானது யாழ் குடா கடலில் அதீதமா கப் பிடிபடுவதனால் தொழிலாளர்கள் இதை சந்தைப்படுத்தலிலும் அல்லது அதைப் பதப் படுத்தலிலும் பெரும் சிக்கலுக் குள்ளாகி யுள்ளனர். அவையாவன:

1. மீன்பிடியில் ஏற்பட்ட வீழ்ச்சி

இந்த மீனின வருகையால், ஏனைய நுகர்வோர் விரும்பத்தக்க பெரிய மீன் வகைகள் பிடிபடுவது குறைந்தமை, மீன் பிடிப்பதற்கு ஏற்றவாறு குறிப்பாக (இறால் கடலில் இடப்படும் வலைகள் சேதமாவதுடன் அதீதமாக பிடிபடும் மீனைக் கரைகொண்டு செல்ல இயலாமை)

2) சந்தைப் படுத்தலில் ஏற்பட்ட வீழ்ச்சி

1. அதீத மீன் உற்பத்தியால் ஏனைய மீன்களின் விலை வீழ்ச்சி.

2. இந்த மீன் இனமானது சமுதாயக் கொள்கையின் நிமித்தம் கிரந்தியை ஏற்டுத்தும் என்ற எண்ணத்தால் நுகர்வோரால் கைவிடப்படல்.

(இவ்விடயம் மருத்துவ ஆராய்ச்சிக்குரியதே)

3) பதப்படுத்தலில் ஏற்பட்ட வீழ்ச்சி

இம்மீனினமானது சூடைமீனைவிட கொழுப்பு அதிகமாக உள்ளதால் தலை, குடல் போன்றவற்றை முற்றுமுழுதாக அகற்றி அதீத உப்பிட்டு வெய்யிலில் காய விடவேண்டிய தேவை உள்ளது. அத்துடன், இக்கருவாடானது உரிய முறையில் சரியான விதத்தில், சரியான பதத்தில் பதனிடா விடின் பூஞ்சணம் பிடிக்கும் தன்மை, நிறம் மாறும் தன்மை, சதை உதிரும் தன்மை என்பனவற்றைக் கொண்டுள்ளது என்பதனையும் அறியமுடிகின்றது. இதனால், இப்பதனிடுதல்-

1) அதிக நேர விரயம்
2) எதிர்பார்க்கப்படும் தரமான கருவாடு கிடைக்காமல் போதல்
3. தலை அகற்றுவதால் நிறைகுறையும்.
4. அதிக உப்பு விரயம்
5. மனித சக்தி விரயம்
6. ஏனைய கருவாடுகளின் விலை வீழ்ச்சி

என்பவற்றினால் பதப்படுத்தும் உரிமையாளர்கள் பதப்படுத்தலில் தயக்கம் காட்டுகின்றார்கள்.

இருப்பின் இதன் சுவை சுவையானது. குறைந்த விலையில் அதிகளவில் மீன்புரதம் மக்களுக்குச் சென்றடைவது வரவேற்புக்குரியது. இலங்கையின் கடல்வளத்தை அழியாது உரிய முறையில் தேவையான அளவு பிடித்து அதனைத் தேவைக்கேற்றவாறு சந்தைப்படுத்தி அல்லது பதப்படுத்தி உள்நாட்டு மீன்பாவனையை அதிக ரித்து அந்நிய செலாவணியைப் பெற்றுக்கொள்ளல் என்ற கொள்கைக்கிணங்க இவைபோன்று எதிர் காலத்தில் இலங்கையில் பிடிபடும் மீன்களை முகாமை செய்வது அவசியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது.


## குடாநாட்டின் கடல்வளம்


இத்துடன், இச்சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக கிலோ 3 ரூபா தொடக்கம் 5 ரூபா வரை கொழும்பிலிருந்து வரும் குளிரூட்டி வாகனங்களில் கொள்வனவு செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்படுகின்றன. இவ்விடயமானது தொழிலாளர்களுக்கு ஓரளவு நிவர்த்தி நிவாரணமாக இருப்பினும் இலங்கையின் பொருளாதாரத்தையும் சந்தைப்படுத்தலையும் அழிவடையாது பொருளாதார வளத்தைப் பாதுகாப்பது சம்பந்தமான விடயத்தையும் கருத்தில்கொள்கையில்

1. பொருத்தமான மீன்பிடி வகை -
2. பொருத்தமான மீன்பிடி அளவு -
3. தேவையானவற்றை மட்டும் தேவையான காலத்தில் பிடித்தல் .
4. உடன்நுகர்வோருக்குச் சந்தைப்படுத்தும் வழிவகை பற்றித் தீர்மானித்தல்-
5. உடன்தேவைக்கு மேற்பட்டவை உடன் பதனிடல் பாதுகாத்தல்-
6. தேவைக்கு மேற்பட்டதை நீண்டகாலத்திற்குப் பதனிடல் -
7. ஏற்றுமதித் தேவைக்குத் தரமானவற்றை எப்போதுமீ பதனிட்டு அனுப்புதல் -
8. பதனிடும் பாதுகாக்கும் முறைகளில் நவீன தொழில்நுட்பத்தைப் புகுத்துதல் -
9. மீன்பிடி உற்பத்தி சம்பந்தமாக போக்குவரத்து, சந்தைப்படுத்தல், தொலைத் தொடர்பு வசதி என்பவற்றை மேற்கொள்ளல் என்பன தேவையாகக் கருதப்படுகின்றன -

எனவே இவ்விடயம் பற்றி அனுபவமுடைய தொழிலாளர்கள், முதலீட்டாளர்கள், சுகாதார மருத்துவ நிபுணர்கள், துறைசார் கல்விமான்கள், பதனிடல், பாதுகாத்தல் தொடர்பாக நிபுணத்துவம் வாய்ந்தோர், சந்தை ஏற்றுமதி அனுபவம் வாய்ந்தோர்,ஆகியோர்களின் கூட்டுமுயற்சியால் எதிர்காலக் கடற்றொழில் திட்டம் வரையப்பட்டு அதை நடைமுறைப்படுத்தலின் அவசியம் உணரப் பட்டுள்ளது. ★

**எம்.பி.அன்றூ**
கடற்றொழில் பரிசோதகர், ஊர்காவற்றுறை.





கிளிநொச்சி தொண்டமான்நகர் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி நிகழ்வின்போது தமிழீழத் தேசியக்கொடியினைக் கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் தனபாலசிங்கம் ஏற்றிவைப்பதை முதலாவது படத்திலும் - அணிவகுப்பு நிகழ்வுக்குத் தயாராகிக்கொண்டிருக்கும் சிறுவர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# தொண்டமான்நகர் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா

திருவையாறு,ஜூலை29

கிளிநொச்சி தொண்டமான்நகர் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி கிராமப் பொதுநோக்கு மண்டப வளாகத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் நிர்வகிக்கப்படும் மேற்படி முன்பள்ளிச் சிறுவர்களின் நலமேம்பாட்டிற்காக நடைபெறும் வருடாந்த சிறுவர் விளையாட்டுப் போட்டி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தொண்டமான்நகர் கிராம அலுவலர் விழாவினைத் தலைமையேற்று நிகழ்த்தினார். தமிழீழத் தேசியக் கொடியினைக் கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் தனபாலசிங்கம் ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வு பங்காள நிறுவனங்களின் அலுவலர்களும் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

முன்பள்ளிச் சிறுவர் விளையாட்டுப் போட்டிகள் பரவலாகக் கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லா முன்பள்ளிகளிலும் நடைபெற்றுவருகின்றன.

(ஐ-393)

# பாடசாலை மாணவருக்கான திருக்குறள் மனனப் போட்டி

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கான திருக்குறள் மனனப் போட்டி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டி பின்வரும் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

தரம் 4,5 கீழ்ப்பிரிவு, தரம் 6,7,8,9 மத்தியபிரிவு, தரம் 10,11,12,13 மேற்பிரிவு என வகுக்கப்பட்டு கீழ்ப்பிரிவிற்கு 01 தொடக்கம் 24 வரையான அதிகாரங்களும் மத்தியபிரிவு 01-38 வரையான அதிகாரங்களும் மேற்பிரிவிற்கு 01-78 வரையான அதிகாரங்களும் மனனத்திற்காக வகுக்கப்பட்டுள்ளன. எனினும் எப்பிரிவு மாணவராயினும் 1,330 குறள்களிலும் ஆகக்கூடிய குறள்களை மனனம் செய்து ஒப்புவிப்பவர்களுக்கு சிறப்பு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் வெற்றி பெறும் மூவருக்கு முறையே 3,000ரூபா, 2,000ரூபா, 1,000ரூபா பரிசில்களும் அதிக குறள்களை ஒப்புவிக்கும் போட்டியாளர்களுக்கு 5000ரூபா பரிசும் வழங்கப்படவுள்ளன. இப்போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதியாகும். விண்ணப்பங்களை ''திருக்குறள் மனனப் போட்டி அமைப்பாளர், யாழ்.கல்வி வலயம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(ஐ-150)

# இந்திய நாடாளுமன்றக் குழுக்களை புறக்கணிக்க தே.ஜ. கூட்டணி தீர்மானம்

புதுடில்லி,ஜூலை29

இந்திய நாடாளுமன்றக் குழுக்களைப் புறக்கணிக்கப் பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி முடிவுசெய்துள்ளது. காங்கிரஸ் தலைமையிலான ஆளும் கூட்டணியின் மோதல் போக்குக்குப் பதிலடியாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகப் பாரதீய ஜனதா கட்சியின் தகவல் தொடர்பாளர் முக்தர் அப்பாஸ் நக்வி தெரிவித்தார்.

கொலைக் குற்றச்சாட்டின்பேரில் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சிபிசோரனை மத்திய அமைச்சர் பதவியிலிருந்து விலக்கக் கோரி நாடாளுமன்றத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணியினர் பெரும் அமளியில் ஈடுபட்டு வந்தனர். இதனால் நாடாளுமன்றம் அடுத்த மாத இறுதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்தநிலையில், தே.ஜ. கூட்டணித் தலைவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி அப்துல்கலாமைச் சந்தித்தனர்.

சட்டவிரோத நடவடிக்கைகளின்பேரில் வழக்குத் தொடரப்பட்ட பலர் இப்போது அமைச்சரவையில் உள்ளனர் என்றும் -

அவர்களை பதவி நீக்கவேண்டும் என்றும் -

அப்போது அவர்கள் ஜனாதிபதியைக் கோரினார்கள்.

இதன்பின்னர் தே.ஜ. கூட்டணித் தலைவர்கள் நேற்றுமுன்தினம் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் இல்லத்தில் கூடினர். நாடாளுமன்றில் நடந்துகொள்ளவேண்டிய முறை பற்றி ஒரு மணிநேரம் ஆலோசனை நடந்தது. எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி, முன்னாள் அமைச்சர்கள் ஜோர்ஜ் பெர்னாண்டஸ், சுஷ்மா சுவராஜ் உட்படப் பலர் இதில் பங்கேற்றனர்.

பின்னர் பா.ஜ. தகவல் தொடர்பாளர் முக்தர் அப்பாஸ் நக்வி கூறியதாவது:-

கறைபடிந்த அமைச்சர்களை நீக்கவேண்டும் என்ற எங்கள் கோரிக்கையை அரசு ஏற்கவில்லை. சிபு சோரன் விவகாரத்தால் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட நாளன்று பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி சபையில் ஒரு அறிக்கை வாசித்தார். அதில் எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சனம் செய்யப்பட்டன.

ஆளும் கட்சியின் இந்த மோதல் போக்கைக் கண்டித்து நாடாளுமன்றில் அமைக்கப்படும் ஆலோசனைக் குழுக்கள், நிலைக் குழுக்களில் பங்கேற்பதில்லை என்று தே.ஜ. கூட்டணி முடிவுசெய்துள்ளது - இவ்வாறு நக்வி கூறினார்.

தே.ஜ. கூட்டணியின் இந்த முடிவு துரதிர்ஷ்டவசமானது என சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி கருத்துத் தெரிவித்தார்.

## மிருதங்கம் வாசிப்பதில் கேரள இளைஞர் சாதனை

பாலக்காடு,ஜூலை29

கேரள மாநிலம் பாலக்காட்டைச் சேர்ந்த இளைஞர் தொடர்ந்து 36 மணி நேரம் மிருதங்கம் வாசித்து உலக சாதனை நிகழ்த்தியுள்ளார்.

கேரள மாநிலம் பாலக்காடு அருகே குழல்மந்தம் பகுதியைச் சேர்ந்தவர் ராமகிருஷ்ணன். இவர் தொடர்ந்து 36 மணிநேரம் மிருதங்கம் வாசித்து உலக சாதனை நிகழ்த்தியுள்ளார். இதுவரை வெங்கடேஷ்வரராவ் என்பவர் நிகழ்த்திய 31 மணிநேர சாதனை தான் உலக சாதனையாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது. இப்போது ராமகிருஷ்ணன் அதைவிட 5 மணி நேரம் அதிகமாக மிருதங்கம் வாசித்துச் சாதனை படைத்துள்ளார்.

அம்சத்வனி ராகத்தில் 'ஓம் காரப்பொருளே' என்ற கீர்த்தனத்தில் அவர் தனது சாதனையை ஆரம்பித்தார். நிகழ்ச்சியைப் பிரபல கேரள இசையமைப்பாளர் தட்சிணாமூர்த்தி ஆரம்பித்து வைத்தார். தனது 36 மணிநேர சாதனையை அவர் முடித்தபோது ரசிகர்கள் பூக்களைத் தூவியும், கை தட்டியும் பாராட்டினர். பல அமைப்புகளும் அவருக்குப் பரிசுகளை வழங்கியுள்ளன.

## ரூபா 10 கோடியில் பெண்கள் சிறை

சென்னை,ஜூலை29

திருச்சியில் 10 கோடி ரூபா செலவில் பெண்களுக்கான தனிச்சிறை அமைக்கப்படுகிறது.

இத்தகவலை, பொதுப்பணி வருவாய்த்துறை அமைச்சர் ஓ.பன்னீர்ச்செல்வம் தெரிவித்தார்.

திருச்சியில் பெண்களுக்கான தனிக்கிளைச் சிறை ரூபா 9.98 கோடியில் அமைக்கப்படுகிறது.

கிளைச்சிறைகளில் உள்ள சமையல் அறைகளை நவீனப்படுத்த ரூபா1.16 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வேலூர், மதுரை, பாளையங்கோட்டை மத்திய சிறைகளின் தற்போதைய இடவசதிகளை அதிகம் ஆக்கும்பொருட்டு 200 சிறைவாசிகளுக்கான அறைகள் கட்டப்படும். இதற்கு ரூபா 2.53 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை, திருச்சி, மதுரை, கோவை நகரங்களிலுள்ள சிறைகளில் பணியாற்றும் முதல நிலை மற்றும் இரண்டாம் நிலை காவலர்களுக்கு 112 குடியிருப்புகளைக் கட்டுவதற்கு ரூபா 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

# சென்னையிலுள்ள அமெ.தூதரகத்தில் 'விஸா'வுக்கு விரல் ரேகைப் பதி

சென்னை,ஜூலை29

சென்னையிலுள்ள அமெரிக்கத் துணைத் தூதரகத்தில் விஸா விண்ணப்பதாரர்களுக்கு கைரேகைப் பதிவுசெய்யும் புதிய விதிமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னையில் உள்ள அமெரிக்கத் தகவல் நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் அமெரிக்க விஸா கோரி விண்ணப்பிக்கும் அனைவருக்கும் விஸா நேர்காணலின்போது அவர்களது இரு சுட்டு விரல்களின் ரேகைகளும் மின்னணு முறையில் பதிவுசெய்யப்படும். இந்த நடைமுறையை நிறைவேற்றிமுடிக்கச் சிலவினாடிகளே பிடிக்கும்.

13 வயதுக்குக் குறைந்த குழந்தைகள், 80 வயதுக்கும் மேலான முதியோர் ஆகியோருக்கு இந்த கைரேகைப்பதிவு நடைமுறைகளில் இருந்து விலக்குத் தரப்படும். தூதர் அந்தஸது உள்ளவர்கள், அதிகாரபூர்வப் பயணம் மேற்கொள்ளும் அரசு அதிகாரிகள், சர்வதேச நிறுவனங்களின் ஊழியர்கள் ஆகியோருக்கும் இந்த நடைமுறையில் இருந்து விலக்கு அளிக்கப்படும்.




இவ்வாறு கைரேகைப் பதிவுக்குப் பிறகு வழங்கப்படும் விஸா, 'பயோ விஸா' என்று அழைக்கப்படும் - என்றுள்ளது.

இந்த கைரேகைப் பதிவு ஆரம்பிக்கப்படுவதை விழாவாக அமெரிக்கத் தூதரகத்தினர் நடத்தினர்.

நடிகர்கள் கமலஹாசன், சூரியா, நடிகை திரிஷா, கிரிக்கெட் வீரர் வெங்கடேஷ் பிரசாத், இசையமைப்பாளர் கார்த்திக்ராஜா உட்படப் பலரும் கலந்துகொண்டு தமது விரல் ரேகைகளைப் பதிவுசெய்தனர்.

இந்த முறையானது இந்தியர்களை கேவலப்படுத்துவதாக உள்ளது என்று எதிர்ப்புகள் கிளம்பியதால் இவர்களை முன்னிறுத்தி அமெரிக்கத்தூதரகம் விரல்ரேகைப் பதிவை ஆரம்பித்ததாகக் கூறப்படுகிறது. (ஒ)

# அற்பத்தனமான தாக்குதல் என்கிறார் கிருஸ்ணசாமி

திருநெல்வேலி,ஜூலை29

என்மீதான தாக்குதல் அற்பத்தனமானது, எனது லட்சிய நோக்கத்தைச் சிதைக்க எண்ணியவர்கள் குறுகிய நெஞ்சத்துடன் மேற்கொண்ட இழிவான செயல் இது எனப் புதிய தமிழகக் கட்சியின் நிறுவுநர் தலைவர் டாக்டர் கிருஸ்ணசாமி தெரிவித்தார்.

பாளையங்கோட்டையில் கடந்த திங்கட்கிழமை நாட்டு வெடிகுண்டு தாக்குதலால் காயமடைந்த கிருஷ்ணசாமி, வண்ணார்பேட்டையிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

அங்கு அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

இந்தத் தாக்குதல் மூலம் என்னையோ, எனக்குப் பின்னால் அணி வகுத்துள்ள தொண்டர்களையோ அச்சுறுத்திவிடமுடியும் என நினைத்தால் அது பகற்கனவாக இருக்கும்.

இந்தத் தாக்குதல் மூலம் அராஜகவாதிகளை அடையாளங்காணப் பொதுமக்களுககு ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது. அந்தச் சிறுமனம் படைத்தவர்களை எதிர்ப்பதற்காக சாலை மறியலிலோ, வேறு எந்த அசம்பாவிதங்களிலோ புதிய தமிழகத் தொண்டர்கள் ஈடுபடக்கூடாது.

எனது உடல் நிலை குறித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ., தி.க. பொதுச் செயலாளர் கி.வீரமணி ஆகியோர் தொலைபேசி மூலம் விசாரித்தனர் - என்றார் கிருஷ்ணசாமி.

# மாணவி இறந்ததையடுத்து பொலீஸார் ~ மாணவர் மோதல்

திருவனந்தபுரம்,ஜூலை29

கேரள மாநிலம் அடூரில் உள்ள ஒரு பொறியியல் கல்லூரியில் படித்துவந்த மாணவி ரஜினி விடுதிக் கட்டணம் கட்டமுடியாததால் 7 மாடிக் கட்டடத்தில் இருந்து குதித்துத் தற்கொலை செய்துகொண்டார்.

மாணவி தற்கொலை செய்துகொண்ட இந்தச் சம்பவம் கேரள மாநிலம் முழுவதும் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது. மாணவர்கள் மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டம், பேரணி எனப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சில இடங்களில் மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். இதனால், பொலீஸாருக்கும் மாணவர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. கார்கள் தீ வைக்கப்பட்டன. கல் வீச்சு, தடிஅடி சம்பவங்களும் நடந்தன.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் கேரள சட்டசபையில் எதிர்க்கட்சிகள், மாணவி மரணம் குறித்து அவசர தீர்மானம் கொண்டு வந்தனர். அப்போது சட்டசபையில் பேசிய முதலமைச்சர் ஏ.கே.அந்தோனி மாணவியின் சாவு குறித்து நீதி விசாரணை நடத்தப்படும் என்று அறிவித்தார்.

மேலும் கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிக்கும் தாழ்த்தப்பட்ட மாணவிகளின் ஊக்கத்தொகை 3 மடங்காக உயர்த்தி வழங்கப்படும் என்றும் அறிவித்தார்.

# அன்னை திரேசாவுக்கு புனிதர் பட்டம் அற்புதத்துக்காகக் காத்திருப்பு

அன்னை திரேசாவைப் புனிதர் என அறிவிப்பதற்குத் தேவைப்படும் இரண்டாவது அற்புதத்துக்காகக் காத்திருப்பதாக அறப்பணியாளர் அமைப்பின் தலைவர் சகோதரி நிர்மலா கூறினார்.

அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

இரண்டாவது அற்புதம் குறித்த தகவல் எதுவும் இதுவரை வெளியாகவில்லை. அதுவரை புனிதர் பட்டம் வழங்கப்படாது. இரண்டாவது அற்புதம் தேவையில்லை என விட்டுவிடமாட்டோம். அற்புதச் சம்பவம் குறித்த தகவல் இந்தியாவிலிருந்து மட்டும்தான் பெறப்படவேண்டும் என்பதில்லை. உலகம் முழுவதும் எந்தப் பகுதியிலிருந்து வேண்டுமானாலும் அற்புதச் சம்பவம் குறித்த தகவல் வந்துசேரலாம்.

எங்கள் அமைப்புக்குப் போதிய நிதி வசதி உள்ளது. அன்னை திரேசா இருந்தபோதே உலகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தாராளமாக உதவிகள் வந்துசேர்ந்து கொண்டிருந்தன - என்றார்.

வங்கத்தின் வடக்குப் பகுதியில் உள்ள ராய்கஞ்சில் மோனிகா பெஸ்ரா என்பவர் புற்றுநோயால் அவதிப்பட்டு வந்தார். அவர் அன்னை திரேசாவை வேண்டிப் பிரார்த்தனை செய்ததால் குணமடைந்தமை அன்னை திரேசாவின் முதல் அற்புதமாகக் கொள்ளப்பட்டது.

# கமல் நடிக்கும் படத்துக்கு இடைக்காலத் தடை விதிப்பு

சென்னை,ஜூலை29

நடிகர் கமலஹாசன் தற்போது 'வசூல் ராஜா, எம்.பி.பி.எஸ்.' என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தின் பெயருக்கு மருத்துவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள்.

இதற்கிடையே, 'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்' பெயரில் படத்தை வெளியிடத் தடைவிதிக்க வேண்டும் என்று நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டு உள்ளது. இதுதொடர்பாகத் தமிழ்நாடு மருத்துவசபைத் தலைவர் பாலசுப்பிரமணியன் தாக்கல்செய்துள்ள மனுவில்,

'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்' என்ற பெயரில் நடிகர் கமலஹாசன் நடித்துவரும் புதிய படம் மருத்துவர்களின் மதிப்பைச் சீர்குலைப்பதாக உள்ளது.

எனவே, 'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்.' என்ற பெயரில் படம் வெளியிடத் தடைவிதிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

இதனை விசாரித்த நீதிபதி 'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்' பெயரில் படத்தை வெளியிட மத்திய தணிக்கைக் குழுவினர் சான்றிதழ் வழங்க இடைக்காலத் தடைவிதித்தார்.

இதற்கிடையே படத்தின் பெயரை மாற்ற கமலஹாசன் முடிவுசெய்துள்ளார். 'எம்.பி.பி.எஸ்.' பெயரை நீக்கிவிட்டு 'வசூல்ராஜா' என்று மட்டும் பெயர் வைக்கிறார்.

விரைவில் இதை அவர் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சிபுசோரனைத் தொடர்ந்து பெண் அமைச்சர் ராஜினாமா

புவனேஸ்வர்,ஜூலை29

ஒரிசா மாநிலத்தில் 1999ஆம் ஆண்டில் பிணை இல்லாத பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டின் கீழ், அம்மாநில பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித்துறை அமைச்சர் பிரமிளா மாலிக் தனது பதவியை ராஜினாமாச் செய்தார்.

ஒரிசாவில் 1999ஆம் ஆண்டில் ஜில்லா பரிஷத் உறுப்பினராக இருந்தவர் பிரமிளா மாலிக். அப்போது ஜெய்ப்பூர் மாவட்ட பிஞ்ஜார்பூரில் அதிகாரியான சித்தார்தா என்பவரை ஆதரவாளர்களுடன் முற்றுகை செய்தார்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஜில்லா பரிஷத் உறுப்பினர், பிரமிளா மற்றும் உடன் வந்தவர்கள் தன்னைத் தாக்கியதாகவும் அலுவலகத்தை நொறுக்கியதாகவும் பொலீஸில் சித்தார்தா புகார்செய்தார். இந்த வழக்கை விசாரித்த ஜாஸ்பூர் நீதிமன்றம் பிரமிளாவுக்கு எதிராகப் பிணையில் வெளிவர முடியாத பிடியாணை பிறப்பித்தது. ஆனால், பிரமிளா கைது செய்யப்படவில்லை.

இந்நிலையில், கடந்தாண்டு நடந்த சட்டசபைத் தேர்தலில் வெற்றிபெற்று பிரமிளா அமைச்சரானார். எதிர்க்கட்சிகள் வலியுறுத்தலால் கொலை வழக்கில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட மத்திய அமைச்சர் சிபுசோரன் பதவியை ராஜினாமாச் செய்தார். இதையடுத்து, ஒரிசா மாநில எதிர்க்கட்சிகளான காங்கிரஸ் மற்றும் இடதுசாரி கட்சிகள், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பிரமிளா பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி வந்தனர். இவர்கள் கூட்டாக இணைந்து பிரமிளாவுக்கு எதிராக அறிக்கை வெளியிட்டனர்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் காலை அமைச்சர் பதவியைப் பிரமிளா ராஜினாமாச் செய்தார். இவரது ராஜினாமாக் கடிதத்தை ஏற்றுக்கொண்ட முதல்வர் நவீன் பட்நாயக், ஆளுநர் ராஜேந்திரனுக்கு அனுப்பிவைத்தார்.

# தி.மு.க. வெற்றியை அடுத்து நீதிமன்றத்தில் வழக்கு

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் வேலூர் தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் கே.எம்.காதர் மொஹிதீன் வெற்றிபெற்றது செல்லாது என்று அறிவிக்கக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்தொகுதியின் வாக்காளர் ஜி.எஸ்.இக்பால் தாக்கல்செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:-

வேலூர் சின்ன அல்லாபுரத்தைச் சேர்ந்த நான், திராவிட முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின பொதுச்செயலாளராக உள்ளேன். வேலூர் மக்களவைத் தொகுதியில் வெற்றிபெற்ற காதர் மொஹிதீன் தி.மு.கவைச் சேர்ந்தவர் அல்ல. அவர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்தவர். கேரளத்தில் இக்கட்சிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அக்கட்சியின் சின்னம் ஏணி.

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் திருச்சித் தொகுதியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி சார்பில் ஏணிச் சின்னத்தில் போட்டியிட்டு தி.மு.கவிடம் தோல்வி அடைந்தவர். ஆனால், இப்போது வேலூர் மக்களவைத் தொகுதி வாககாளர்களிடம் தான் தி.மு.கவைச் சேர்ந்தவன் என்று பொய்யான தகவலைக் கூறி வெற்றி பெற்றுள்ளார். இது சட்ட விரோதமானதாகும்.

மணிச்சுடர் என்ற பத்திரிகையின் ஆசிரியராக காதர் மொஹிதீன் உள்ளார். இந்திய யூனியன் முஸ்லீம் லீக், வேலூர் தொகுதியில் வெற்றி பெற்றுள்ளது என்று, தேர்தல் முடிந்த பிறகு அவர் அப்பத்திரிகையில் செய்திவெளியிட்டுள்ளார். அவர் தி.மு.கவைச் சார்ந்தவர் என்று பொய்யான தகவல் கூறி வாக்காளர்களை ஏமாற்றி வெற்றிபெற்றுள்ளார் என்பது இதன்மூலம் தெரிகிறது. எனவே, அவர் வெற்றி பெற்றது செல்லாது என்று அறிவிக்கவேண்டும் - என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

## காரியாலயம் ஒன்றிற்கு சிற்றூழியர் தேவை

கல்வித்தகைமை தேவையில்லை. ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சிறிது சமையல் வேலை தெரிந்தவராக அல்லது பழக விருப்புடையவராக இருத்தல் நல்லது.

உடன் விண்ணப்பிக்கவும்
அல்லது நேரில் வரவும்.

**ஜெசிபா**
140, பலாலி வீதி,
(பெற்றோல் செற் முன்பாக),
திருநெல்வேலி. (C/36393)


## சமூகவிஞ்ஞான படிப்பு வட்டத்தின் மாதாந்த கருத்தரங்கம்

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் தனது துறைசார் மாதாந்த கருத்தரங்குத் தொடரை நாளை மறுதினம் சனிக்கிழமை தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்கிறது என்று படிப்பு வட்ட அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு யாழ்.நகர் ஆரியகுளம் சந்திக்கு அண்மையிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் 'இலங்கை இனப்பிரச்சினையில் வெளிநாடுகளின் இராஜதந்திர தலையீடுகள்' எனும் விடயத்தில் கருத்துரையும் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளன.

நிகழ்ச்சியின் அறிமுகவுரையை சமூக விஞ்ஞான ஆர்வலர் க.வேல் தஞ்சனும், கருத்துரையை யாழ்.பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞான சிரேஷ்ட விரிவுரையாளர் கே.ரி. கணேசலிங்கமும் நிகழ்த்துவார்கள்.

கருத்துரையையடுத்து கலந்துரையாடல் நடைபெறும். சமூக விஞ்ஞான ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், சமூகவிஞ்ஞானத்துறை மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு பயன்பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)


## மரண அறிவித்தல்



### திருமதி முத்துலிங்கம் பவளம்

யாழ்ப்பாணம், கொக்குவில் சொர்ணவடலியைச் சேர்ந்த திருமதி முத்துலிங்கம் பவளம் அவர்கள் (25-07-2004) ஞாயிறுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கிருஷ்ணசாமி மற்றும் ராஜலட்சுமி, புவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் ராஜ்குமார் (மக்கள்வங்கி கொழும்பு), இந்திரகுமார் (ஜேர்மனி), விஜயகுமார் (கனடா), ஸ்ரீ கர்ணகுமார் (காலெப் இலங்கை வேதாகம கல்லூரி, பேராதனை), சரோஜா (டென்மார்க்), பவானி (கொக்குவில்), ரஜனி (சாவகச்சேரி), நந்தினி (ஜேர்மனி), சாந்தினி (கனடா) ஆகியோரின் அருமைத் தாயாரும் துரைரெட்ணம் (டென்மார்க்), காலஞ்சென்ற ஆனந்தராஜா (கொக்குவில்), நாகேந்திரன் (வாசன்- சாவகச்சேரி), மனோகரன் (மனோ-ஜேர்மனி), நித்தியானந்தம் (நித்தி-கனடா), காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் ராஜலட்சுமி (பேபி-கொழும்பு), ராஜவாணி (செல்லா-ஜேர்மனி), ஜெயகௌரீஸ்வரி (கௌரி - கனடா), தமயந்தி (தமோ-கண்டி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சதீஸ்குமார்-சர்மிளா (லண்டன்), ஜெயமஞ்சுளா-நந்தகுமார் (ரவி,ஜேர்மனி), சுரேஸ்குமார் (ரதன்-கொழும்பு), ராஜகரன் (கனடா), ராஜ்பவன் (கனடா), ஆர்த்திகா (ஜேர்மனி), அஜித்தன் (ஜேர்மனி), டினேஸ் (கனடா), டிருக்ஷி (கனடா), டிலக்ஷி (கனடா), செலோமி ஜொனேகா (கண்டி), சைலஜா-கோபிநாத் (டென்மார்க்), துஷ்யந்தன் - சைலா (டென்மார்க்), பகீரதன் (டென்மார்க்), துவாரகா (டென்மார்க்), சுஜித்தா- சுரேந்திரன் (சுவிஸ்), வேணுஜா - சுந்தரகுமார் (கொக்குவில்), ஹெயி லஜா (கொக்குவில்), லக்ஷிகா (சாவகச்சேரி), வினுஷன் (ஜேர்மனி), தாரணி (ஜேர்மனி), பிரணவி (கனடா), டெனிஷா (கனடா) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் சந்தியா (ஜேர்மனி), அபினஜா (டென்மார்க்), அக்ஷஜா (டென்மார்க்), அபூர்ஷன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2004) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது கொக்குவில் மேற்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூநாறி லேன்,
சொர்ணவடலி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
**பிள்ளைகள்.**
(34638)(21-19)


## தொலைக்கல்விப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,ஜூலை29

கடந்த மே மாதம் 8ஆம், 9ஆம் திகதிகளில் நடைபெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கான தொலைக்கல்வி தொடர்பான பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

மேற்படி தொலைக்கல்வி தொடர்பாக நடைபெற்ற 2ஆம் அரையாண்டுக்குரிய பரீட்சையினதும், மறுநாள் நடைபெற்ற முதலாம் அரையாண்டுக்குரிய மீள் பரீட்சையினதும் முடிவுகளே தற்போது வெளியாகியுள்ளன.

இம்முடிவுகள் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தனித்தனியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(10-201)

## விவேகானந்த சபையின் பரீட்சை நவம்பரில்

யாழ்ப்பாணம்,ஜூலை29

கொழும்பு விவேகானந்த சபையின் ஏற்பாட்டில் அகில இலங்கை சைவசமயப் பாடப் பரீட்சை நவம்பர் மாதம் 7ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பப் பத்திரங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் 2003ஆம் ஆண்டில் இடம்பெற்ற மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

புதிதாக இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்பும் பாடசாலைகள் மேற்படி சபையின் கௌரவப் பொதுச்செயலாளருடன் கடிதம்மூலம் தொடர்புகொண்டு பரீட்சை பற்றிய விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(10-201)

## வீதி விளக்குகள்

யாழ்ப்பாணம்,ஜூலை29

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 28 கிராம அலுவலர் பிரிவுகளில் 127 இடங்களுக்கு வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. (10-185)

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜூலை29

இந்தியா, கோயம்புத்தூர் ஆர்ச வித்யா குருகுலத்தைச் சேர்ந்த சுவாமி யோகேசானந்த அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவு இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு நீர்வேலி, வாய்க்கால் தரவை பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழாவை முன்னிட்டு இச்சொற்பொழிவு ஆற்றப்படவுள்ளது. (10-201)

## பாடசாலைகளுக்கு கணனிகள்

தென்மராட்சி,ஜூலை29

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த சாவகச்சேரி மகளிர் கல்லூரி,கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்குக் கணனி இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

கணனி கற்கைத் திட்டத்தின் கீழ் இப்பாடசாலைகளுக்கு தலா பத்து கணனி இயந்திரங்கள் மத்திய கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டன என்று வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்தார்.

(ஐ-117)


புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்

FedEx Express

விசேட விலைக்கழிவு 10%

விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக
பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**THIRUMURUGAN COM NET**

*Opposite Diolag phone shop*
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836 E.mail:thirumurugan5@lycosmail.com

பலநோக்கு கூ. ச. முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310



## வரலாறு காணாத மலிவு விற்பனையும் புத்தகக் கண்காட்சியும்

கொழும்பு ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன்
யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால்
பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக
வரலாறு காணாத மலிவு விற்பன்னை நடைபெறுகிறது.

**காலம்: 2004 ஜூலை 19 முதல் 29 வரை**
நேரம்: தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்)
இடம்: யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்

- சகலருக்கும் இலங்கை நூல்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.
- பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
- மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகளை (ஒவ்வொன்றிலும் ஆகக் குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விஷேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்வியியற் கல்லூரி, பொதுநிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், தனியார் கலவி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களிற்குக் கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்துதரப்படும்.

தொடர்புகளிற்கு:
**வணிக மாணவர் மன்றம், யாழ். பல்கலைக்கழகம்.**

(C/36016)(43-26-19)



Dialog GSM

டயலொக்
கையடக்க GSM
தொலைபேசி அட்டைகளை
மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**Sri Murugan**
Tele Communication
&Agency Post Office,
303, K.K.S. Road, Jaffna,
T.P.: 021- 222 - 5392 Fax: 222 3214.
எந்நேரமும் உன்னுடன்....!

(சீ-36079) (21-19)



## க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு!

க.பொ.த. உயர்தர 2006 April பரீட்சைக்கு ஆங்கிலத்தை ஒரு பாடமாகத் தோற்றும் மாணவர்களுக்கான A/L English வகுப்புகள் ஆரம்பமாக இருக்கின்றன. பரீட்சையை எதிர்நோக்கியிருக்கும் மாணவர்கள் உடனடியாக எமது அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

- நிர்வாகி.

**LONDON ENGLISH COLLEGE**
105, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021-222-5889,
0777 252180, 077 6303539
E.Mail: lecjaffnabranch @ yahoo.com

(சீ36391) (11-12-23)



சரவணை தேவபுரம்

## அருள்மிகு ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோயில்

## வருடாந்த மஹோற்சவம் - 2004

## தேர்த்திருவிழா - 31.07.2004

கதிர்வேலவன் அடியார்களே,

ஆலயத்தின் மஹோற்சவம் 22.07.2004இல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 31.07.2004 சனிக்கிழமை தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது.

முற்பகல் 10.30 மணிக்கு
சுவாமி தேருக்கு எழுந்தருளல

**புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம்**

திருநெல்வேலி, ஆறுமுகம் சிற்பாலயம் - சிற்பச்சக்கரவர்த்தி சிற்பக்கலைமணி, கலாபூசணம் ஸ்தபதி ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆச்சாரியார் அவர்களினாலும் அவர் புதல்வர் ஜெயப்பிரகாஸ் ஆச்சாரியார் அவர்களினாலும் அவர்கள் குழுவினராலும் அழகுற ஆக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் 30-07-2004 வெள்ளிக்கிழமை பகல் 12.15 மணிக்கு நடைபெறத் திருவருள்கூடியுள்ளது.

*ஆசியுரைகள்:*

1. பிரதம குரு - சிவாச்சரரியகுருமணி சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக்குருக்கள்
2. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நல்லைஆதீனம்.
3. சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம உதவிப்பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் யாழ்ப்பாணம்.
4. திரு.மா.சிவசுப்பிரமணியம் ஓய்வுபெற்ற ஆசிரியர்.

வேலவன் அடியார்களே! தேர்த்திருவிழாவைக் கண்டுகளிக்க
வருக! வருக!
திருவருள் பெறுக! பெறுக!


ஆலய பரிபாலனசபையினரும்,
தேர்த்திருப்பணிச் சபையினரும்
10ஆம் திருவிழா உபயகாரரும்.

சரவணை,
வேலணை.

(C/34611)(42-21-19)



## ஈராண்டு நினைவஞ்சலி



அமரர்
### அமிர்தலிங்கம் துரைசிங்கம்

*அன்னை மடியில்* 17 02 1913 *ஆண்டவன் அடியில்* 21 07 2002

திதி: பூர்வபக்க திரயோதசி 29-07-2004

*ஈராண்டும் ஆயிற்றோ உங்களை நாம் பிரிந்து*
*தீராத வேதனையால் தினந்தினம் வாடுகின்றோம்*
*ஆறாத கண்ணீர் அருவியெனப் பாய்கின்றதே – நாம்*
*மாறாத துன்பத்தால் மனங்கலங்கித் தவிக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*நிரந்தர முகவரி: 'லிங்கநேய', [illegible] [illegible]டுவாள்.*
*தற்காலிக மு[illegible] பிரதான வீதி, [illegible]துறை.*

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்:
**குடும்பத்தினர்.**

(34639)(42-21-19-15)

# இந்தியாவையா? அமெரிக்காவையா? இலங்கை யாரை அனுசரிக்கப் போகிறது?



இந்தியா, இலங்கை மற்றும் அண்டை நாடுகளினை பிரித்தானியா தனது காலனி ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தபோதே பிரித்தானியாவின் இந்திய ஆட்சி இலங்கையில் மிகவும் ஆழமான செல்வாக்கினைப் பெற்றிருந்தது.

இந்தச் செல்வாக்கினை இந்திய விடுதலையின் பின்பு இலங்கை மீது செலுத்த முற்படுகின்றது; முற்பட்டும் உள்ளது.

பிரித்தானிய காலனி ஆதிக்கத்திலிருந்து இலங்கை விடுதலை பெற்ற உடனடியாகவே அந்த இடத்தினை அமெரிக்கா பிடித்துக் கொண்டது. இது நேரடி ஆதிக்கம் இல்லாவிடினும் சுயநல நோக்கத்திற்காக அதாவது, தனது நாட்டின் நலனை அடிப்படையாகக் கொண்டு தூரநோக்குடன் செயற்பட்டது.

1948இல் இலங்கை சுதந்திரத்திற்கு அதற்கான அரசியல் அங்கீகாரத்தினை வழங்கிய அமெரிக்கா, 1951இல் தனது வானொலி நிலையம் (VOICE OF AMERICA) ஒன்றையும் இலங்கையில் நிறுவியது.

ஆசியாவில் ஒரு வல்லரசு அந்தஸ்தினைக் கைப்பற்றிக்கொள்ள இந்து சமுத்திரப் பிராந்தியம் எவ்வளவு முக்கியம் என்பது யாவரும் அறிவர். இந்தப் பிராந்தியத்தின் தலைவிதியினை நிர்ணயிக்கும் சக்தி இலங்கைக்குப் புவியியல் ரீதியாகவே உள்ளது. இதனால் இலங்கை விடயத்தில் பிற நாடுகள் மட்டும் அல்ல, இந்தியாவும் அதிக அக்கறையுடனும், அவதானத்துடனும் செயற்படுகின்றது.

இலங்கை மீது பிறநாடுகளின் தலையீட்டினை இந்தியா விரும்பவில்லை என்பது ஒருபுறம் இருக்க, இலங்கையில் இந்தியத் தலையீட்டினை இலங்கை அரசு விரும்புகிறதா? இலங்கை விவகாரத்தில் சிங்கள அரசை அன்றும் இன்றும் அனுசரித்தே செல்கிறது இந்தியா. ஆனால், அவ்வவ்போது அரசோ இந்தியாவைப் புறந்தள்ளியே வந்திருக்கிறது.

இந்தியாவிற்கு இலங்கை அரசுசெய்த அரசியல் மற்றும் இராஜதந்திரப் புறக்கணிப்புக்களினையும் மறந்து உதவுகின்றது இந்தியா.

இந்தியாவிற்குச் சவாலாகப் போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்து வரும் நாடுகளான சீனா, பாகிஸ்தானை இலங்கை அனுசரித்துச் செல்கின்றது. இந்த நன்றிக்கடனை இரண்டு நாடுகளும் மறக்கவில்லை என்பது அவர்களின் அனுசரிப்பில் தெரிகின்றது.

இந்தியா விடுதலை பெறமுன்பு ஜவஹர்லால்நேரு கூறிய விடயம் ஒன்றைக் கவனத்

## அரசியல் களத்தில்

தில் கொள்வோம். "அட்லாண்டிக்கினை பசுபிக் மாற்றீடு செய்யும். பசுபிக்கில் செல்வாக்கு செலுத்தும் நாடாக இந்தியா இல்லாதபோதும் காலப்போக்கில் பசுபிக்கில் ஒரு முக்கிய நாடாக செல்வாக்குச் செலுத்தும்"

இந்தப் பரந்துவிரிந்த பாரதக் கொள்கையினை இந்தியா கைவிடவில்லை.

இங்கு ஒரு செய்தி புலனாகின்றது. யாதெனில், தனது ஆதிக்கத்தில் இல்லாத பசுபிக் மீதான எண்ணம் இவ்வாறு இருக்கும்போது ஆசியாவில் தனக்கென ஒரு இடத்தினை வைத்துக்கொள்ளும் இந்தியா இந்து சமுத்திரத்தில் எப்படி பிறரின் ஆதிக்கத்தினை அனுமதிக்கும்?

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கை ஒரு முக்கிய நாடு. எனவே, சர்வதேசம் (குறிப்பாக அமெரிக்கா) இலங்கையைத் தனது ஆதிக்கத்தின் வலைக்குள் வீழ்த்தப் பல பிரயத்தனங்களை மேற்கொள்ளும்போது இந்தியா பார்த்துக்கொண்டு சும்மா இருக்கப்போவதில்லை.

1949 ஒக்டோபர் ஒன்றில் சீனா குடியரசு ஆகியபோது இலங்கை அதற்கு இராஜதந்திர அங்கீகாரம் வழங்கியது. இதனை அமெரிக்கா விரும்பவில்லை. ஆனாலும், சீனாவுடன் நெருங்கிய உறவுகளை வளர்த்துக்கொண்டது.

1962, 1971 இல் முறையே இந்திய - சீன எல்லைப்போர், இந்திய - பாகிஸ்தான் போர் நடைபெற்றபோது இலங்கை இந்தியாவை எள்ளளவும் நினைத்துப் பார்க்கவில்லை. சீனாவிற்கும் பாகிஸ்தானிற்குமே ஆதரவு காட்டியது. சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அமெரிக்க எதிர்ப்புக் கொள்கையால் இந்தியாவிற்கு ஏற்பட்ட சாதக மாற்றங்களினையும் குறிப்பிட வேண்டும்.

ஜே.வி.பியின் எழுச்சியும் இந்தியாவின் வருகையுடன்தான் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய செல்வாக்கினை சிங்கள மக்கள் மத்தியில் பெற்றது. இந்தியா, இலங்கையினையும் தனது ஆதிக்க செல்வாக்கின் கீழ் கொண்டு வந்துவிடும் என சிங்கள மக்கள் நினைத்தனர். ஜே.ஆர்.அதனை நிஜமாக்கினார். இந்திய இராணுவம் இலங்கை வந்தது. இதிலும் சிறிலங்கா இந்தியாவை தலைகுனியச் செய்தது.

- இவ்வாறு நீண்டு செல்லும் சம்பவங்கள் ஒருபுறம் இருக்க, இலங்கை மீது தற்போது தீவிர ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கும் இரண்டு ஆதிக்க அரசுகளினாலும் ஏற்படப்போகும் பாதக விளைவுகளில் அதிகம் பாதிக்கப்படப் போவது இலங்கையே.

இந்த இரண்டு ஆதிக்க அரசுகளின் செயற்பாடுகளில் யாரை இலங்கை அரசு விரும்புகின்றது. அமெரிக்காவையா? இந்தியாவினையா? அண்மைய காலங்களில் அமெரிக்க இராணுவ வல்லுநர்களின் வருகை தமிழ்மக்களிற்கு மட்டுமன்றி இந்தியாவிற்கும் அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளது. அண்மையில ஆட்சிக்கு வந்த மன்மோகன் சிங்கின் அழைப்பை ஏற்று இந்தியா சென்றார் மகிந்த ராஜபக்ஷ.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நிற்க அதிக தகைமை உடையவர். இவர் இந்தியாவை நீண்டகாலமாக கண்டித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பலாலி விமானத்தளததினை இந்தியாவின் உதவியுடன் 50 கோடி ரூபா செலவில் புனரமைக்க ஏற்பாடாகியிருந்தது. அது தாமதமானதைக் காரணம் காட்டி வீதி அபிவிருத்தி அதிகாரசபையினை கொண்டு 24கோடி ரூபாவில் புனரமைக்கப்படவுள்ளதாக அண்மையில் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க இராணுவ மற்றும் இராஜதந்திர வல்லுநர்களின் யாழ். வருகை, பலாலி தள முன்னரங்க பாதுகாப்புத் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் நகர்வுகளினைக் கொண்டு பார்க்கும்போது அமெரிக்காதான் இந்தியாவின் தலையீட்டினைப் புறந்தள்ளக் காரணமாக இருந்திருக்கின்றதா? என்ற கேள்வியும் உண்டு.

வர்த்தகம், கடல், புலனாய்வு மற்றும் இராணுவம் என்று நீண்டுசெல்லும் உடன்படிக்கைகளில் அமெரிக்காவுடன் கைகோர்த்து நிற்கிறது சிறிலங்கா அரசு. (இதில் குறிப்பாக பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்க தலைமையகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளமை குறிப்பிடலாம்.)

இவ்வாறான சம்பவங்களினை இந்தியா பார்த்துக்கொண்டு சும்மா இருக்கின்றது என்று சொல்வது மிகமிகத் தவறு. அண்மையில் ஆட்சிப்பீடம் ஏறிய அரசின் இந்திய இறைமையினைத் தீர்மானிப்பவர்களாக உள்ளவர்கள் விடுதலைப் போராட்டத்தின் எழுச்சிக்காலத்தில் இருந்த வல்லுநர்கள்.

முன்பு குறிப்பிட்டதுபோல் இரண்டு ஆதிக்க அரசுகளின் தலையீடு இலங்கைக்கு எவ்வாறான பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என புத்திஜீவிகளின் கருத்துக்களில் இருந்து அறிய முடிகின்றது.

புலிகள் இந்தியாவை அரவணைத்துச் செல்லவே விரும்புகிறார்கள். புலி எதிர்ப்பு கொள்கையில் இந்தியாவிற்கு மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையினை அவர்கள் இன்னும் இழக்கவில்லை.

**சி.கேசவன்**

இந்தியா இந்த விவகாரத்தில் நன்கு திட்டமிட்டே அடுத்த நகர்வுகளை மேற்கொள்ளும். ஏனெனில், அரசியல் இராஜதந்திர ரீதியிலோ அன்றி இராணுவ பலத்தினாலோ இந்தியாவை புலிகள் வெற்றிகொண்டனர். புலிகளின் அப்போதைய நிலை வேறு தற்போதைய நிலை வேறு கெரில்லாப் போராளிகளாக இருந்தவர்கள் சர்வதேச அரங்கில் பேசப்படுவது மட்டுமல்ல அதே அரங்கிலையே தமது வெற்றிக்கான காய்களை நகர்த்தி வருகின்றனர்.

அமெரிக்காவின் அதிஉயர் இராணுவ நிபுணர்களின் பயிற்சி மற்றும் ஆலோசனைகளைப் பெற்ற இலங்கை இராணுவ கொமாண்டோக்களே புலிகளுடன் போரிட முடியாமல் பின்வாங்கிய சம்பவங்கள் வரலாறு சொல்லும்.

எது எவ்வாறு எனினும் கடந்த காலங்கள் கடந்தவையாக இருக்கட்டும் என்று விட்டாலும் இந்தியாவின் அடுத்தநகர்வு என்ன? அதேபோல் அமெரிக்காவின் நடவடிக்கை என்ன? இதில் சிறிலங்கா யாரை அனுசரித்துக் கொள்ளப் போகின்றது? இதில் தவறுவோர் புலிகளிற்குக் கைகொடுப்பார்களா? பொறுத்திருந்து பார்ப்போம். ★

# மாணவர்களின் பெறுபேற்று வீழ்ச்சிக்கு பாடசாலை வரவொழுங்கும் காரணமா?

எந்தவொரு நாட்டினதும் பல்வேறு மூல வளங்களில் கல்வி முதன்மையானதாகும். அந்த வகையில் கல்வியின் முக்கியத்துவம் அன்றுதொட்டு இன்றுவரை உலகெங்கும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இலங்கையைப் பொறுத்தமட்டில் இலங்கை ஓர் அபிவிருத்தி அடைந்துவரும் நாடாக இருந்தபோதும் இலங்கையின் எழுத்தறிவு வீதம் 92 ஆகும். இதற்கு காலத்துக்காலம் இலங்கை அரசு கொடுத்த பலவேறு ஊக்கிகளே காரணமாகும். அந்த ஊக்கிகளாக சுயமொழிக்கல்வி, சுயமொழிப்பரீட்சை, இலவசக் கல்வி, இலவசப் புத்தகம், இலவச சீருடை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இலங்கையின் கல்வியில் முன்னணியில் திகழ்கிற பல்வேறு மாவட்டங்களில் யாழ்ப்பாணமும் ஒன்றாகும். ஆயினும் தற்போது யாழ்ப்பாணத்தின் கல்வி நிலைமை தொடர்பாகப் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.


இவ்வாறான ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு பல்வேறு ஏதுக்கள் காரணமாக இருந்தபோதும் இவற்றுள் முதன்மையான காரணி மாணவரின் பாடசாலை வரவொழுங்கின்மையே எனக் கல்வியியலாளரும், அதிபர், ஆசிரியர்களும் குறிப்பிடுகின்றனர். இந்த வரவொழுங்கின்மை ஏற்படுவதற்கான காரணம் பற்றியும் மாணவனின் கற்றலில் இது செலுத்தும் தாக்கம் பற்றியும் ஆராயவேண்டும்.

மாணவர்கள் தொடர்ந்து பாடசாலைக்குச் செல்லாதிருப்பதற்குரிய காரணிகளை மூன்று வகைக்குள் உட்படுத்தலாம்.

அவையாவன:-

தனியார் தொடர்பான காரணிகள், வீட்டுச் சூழலுடன் தொடர்பான காரணிகள், பாடசாலையுடன் தொடர்பான காரணிகள் என்பனவாகும். தனியாள் தொடர்பான காரணியில் மாணவன் தொடர்பான பிரச்சினைகள் அடங்கும். இதில் பிரதானமாக மாணவனின் மன நிலையையே குறிக்கும். அதாவது நரம்பு சம்பந்தமான நோய்கள், நரம்புக் கோளாறு, உடற்தளர்ச்சி, அசாதாரண பயம், அதிகரித்த உணர்ச்சி, அதிபர், ஆசிரியருக்கு பயப்படுதல் போன்றனவும் பார்வைக் குறைபாடு, பேச்சுக் குறைபாடு, ஆளுமைக் குறைபாடு, மாணவனின் பழக்கவழக்கங்கள், சகபாடிகளின் உறவு வலுவின்மை, பாடசாலை நடைமுறைக்கு இயைபுபடுத்திக் கொள்ளமுடியாமை முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

வீட்டுச் சூழலுடன் தொடர்பான காரணிகளுள் பொருத்தமற்ற குடும்பச் சூழலில் அதன் அங்கத்தவரான மாணவனும் பாதிக்கப்படுகிறான். குடும்பத்தில் நிலவும் ஒற்றுமையின்மையால் மாணவனது ஆளுமையும் பாதிக்கப்படும். பிள்ளை ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்லவும் கற்றலில் சிறப்பாகப் பங்குபற்றவும் குடும்ப அங்கத்தவர்கள் உரிய கணிப்பையும் ஊக்கத்தையும் வழங்கவேண்டும். மேலும் புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான நடைமுறைகளைப் பற்றிப் பெற்றோர் நன்கறிந்திருந்து கற்றலுக்கு வேண்டிய உபகரணங்களைப் பெறுவதற்கு வழிசெய்தல் வேண்டும். இவற்றுக்கு மாறாக உபகரணம் இன்றிப் பாடசாலை செல்லும் பிள்ளை உளரீதியாகப் பாதிப்படைகிறான். மேலும் மாணவனின் தரத்திற்கு மேற்பட்ட எதிர்பார்க்கையை பெற்றோர் கொண்டிருந்து மாணவனை அடிக்கடி தூண்டுவதால்




அவனது உளநிலை பாதிக்கப்பட்டு பாடசாலையிலும் வெறுப்பு ஏற்படுகிறது.

மேலும் பாடசாலை தொடர்பான காரணிகள் காரணமாகவே 60வீதமான மாணவர்களின் வரவொழுங்கு பாதிக்கப்படுகிறது. அதாவது, மாணவர் விருப்புடன் பங்கேற்கும் பாடத்திட்டம் அமையாதிருத்தல், கற்பித்தல் முறையில உள்ள குறைபாடுகள், மாணவருக்குக் கடும் தண்டனை வழங்குதல், வகுப்பறைச் செயற்பாடுகளில் மாணவருக்குத் தகுந்த உற்சாகம் வரவேற்பு கிடைக்காமை, நாளாந்தம் பாடசாலையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க ஏற்ற ஒழுங்குகள் இல்லாமை போன்றனவும் மேலும் ஆசிரியர் மையக்கல்வியில் இருந்து மாணவா மையக் கல்விக்கும் மதிப்பீட்டுக் கலாசாரத்தில் இருந்து கணிப்பீட்டு கலாசாரத்துக்கும் செல்கிறோம் என்று வாய்ப்பேச்சளவில் கூறுகிறோமே தவிர, அவற்றுக்குரிய செயல் வடிவம் கொடுக்கப் பின்னடிக்கிறோம்.

எனவே, இந்த வரவொழுங்கின்மையானது மாணவரது கற்றல் செயற்பாட்டை நேரடியாகப் பாதிப்பதோடு பெறுபேற்று வீழ்ச்சியிலும் தாக்கம் செலுத்துகிறது. நவீன கற்பித்தல் செயலொழுங்கு தொடர் சங்கிலி அமைப்பிலே செல்கிறது. அதாவது ஒரு வகுப்பில் எண்ணக்கரு ஒன்றை அனுபவ ரீதியாக விளக்கும் செயன்முறை இடம்பெற்றால் மற்றைய வகுப்பில் அதற்கான பயிற்சி வேலைகள் இடம்பெறும். இதில் எந்தவொரு வகுப்புக்குச் சமுகமளிக்காத மாணவனும் குறித்த எண்ணக்கரு தொடர்பான இடர்பாட்டை எதிர்கொள்வான். இதனால் அடுத்த பாடநெறிக்குத் தேவையான முன்னறிவைப்பெற முடியாத நிலையும் தகுந்த அடிப்படை அறிவைப் பெற்று அடுத்த வகுப்பினை இலகுவாகத் தொடர ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்வதும் சகல பாடங்களிலும் இடையறாது பங்குபற்றுவதும் அவசியமாகும்.

எனவே, யாழ்ப்பாணத்தின் கல்விப் பெறுபேற்று வீழ்ச்சியானது உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டுமாயின் உரிய தரப்புக்களில் இருந்து நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். ★

**எம்.சுகந்தன், சங்கானை.**

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், கச்சேரி, இல.186, கண்டி வீதியில் 5 அறைகளுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்கு உள்ளது. வாகனத் தரிப்பிட வசதி உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. மாலை 5 மணியின் பின் பார்வையிடலாம். தொடர்பு: T.P.:0777 496595. (34645)

### தவறிவிட்டது

குருமண்காடு, வவுனியாவைச் சேர்ந்த பரமேஸ்வரன் கார்த்தீபன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.870050852V), வவுனியா நிரந்தர அடையாள அட்டை மற்றும் ரசீதுகள் அடங்கிய பேர்ஸ் 26.07.2004 திங்கட்கிழமை யாழ். பஸ்நிலைய - ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 71, பிறவுண வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.:077 6354389. (34643)

### நாடகநூல் விற்பனைக்கு

பரிசுபெற்ற 7 நவீன வானொலி நாடகங்களைக் கொண்ட நூல் 'எங்கள் நாடு' 400 நாடகங்கள் எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது படிக்கலாம், நடிக்கலாம். ரூபா 150/=.

(34654)

# நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்கிறது ஹெலஉறுமய

கொழும்பு,ஜூலை29

தேசிய பாதுகாப்பிற்கும் விசேடமாகக் கொழும்பு மாவட்டத்தின் பாதுகாப்பிற்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அரசைப் பாதுகாப்பதற்காகத் தமிழர் கூட்டமைப்பின் உதவியை நாடுவதில் காலத்தைக் கடத்தாது நாட்டையும் மக்களையும் பாதுகாக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் பிரதான அரசியல் ஆலோசகர் திலக் கருணாரத்ன தெரிவித்தார்.

கொட்டாவையில் இடம்பெற்ற கொலைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே திலக் கருணாரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

கொழும்பு மற்றும் கிழக்கு மாகாணம் பெரும் பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளன. நாடு முழுவதும் ஆயுதக் குழுக்கள் சுதந்திரமாகத் திரிகின்றன.

அதேபோல், ஆயுதங்களும் தாராளமாகப் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. பாதாள உலகக் கும்பல்களுக்கும் ஆயுதங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

இதனால், கொழும்பு நகரின் பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதன் பிரதிபலிப்பே கொட்டாவைச் சம்பவம். கிழக்குப் புலிகள் வந்து தங்கியிருந்த இடத்தைக் கண்டுபிடிப்பதற்குப் பொலீஸாருக்கு 4 மணித்தியாலங்கள் சென்றுள்ளது. ஆனால், இக்கொலைகளைச் செய்தபுலிகள் இதற்குள் மட்டக்களப்பிற்குப் போய்ச்சேர்ந்துவிட்டனர். இது எமது பாதுகாப்புத் திட்டத்தின் பெரும் பின்னடைவையே எடுத்துக்காட்டுகிறது.

நோர்வே கண்காணிப்புக் குழுவினரை நம்பமுடியாது. டக்ளஸ் தேவானந்தா கொலை முயற்சி தொடர்பாக இதுவரையில் தமது அறிக்கையினை வெளியிடாது அவர்கள் மௌனம் சாதித்து வருகின்றனர். இதுபோன்ற நிலைப்பாட்டையே கொட்டாவ சம்பவத்திலும் மேற்கொள்வார்கள் - என்றார் கருணாரத்ன. (ஐ-204)

## யாழ். பல்கலைக்கழகத்தில்
# ஆங்கிலம், தகவல்தொழில்நுட்பம் இருதுறைகளும் மேம்படுத்தப்படும்

யாழ். பல்கலைக்கழகத்தில் ஆங்கிலக்கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை ஆகியவற்றை மேம்படுத்துவது தொடர்பான திட்டம் குறித்து கொழும்பில் இன்று இடம்பெறும் கூட்டம் ஒன்றில் ஆராயப்படவிருக்கிறது. உயர்கல்வி, கல்வி அமைச்சுச் செயலாளர் தாராடிபெல் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் மற்றும் துறைசார் பீடாதிபதிகள், தலைவர்கள் கலந்து கொள்வர்.

ஆங்கிலக்கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறைகளை மேம்படுத்துவதற்காக உலகவங்கி இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு நிதியுதவி வழங்க முன்வந்திருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் யாழ். பல்கலைக்கழகத்துக்கும் உதவி கிட்டவிருக்கின்றது. (ஐ-3)


## "எற்கின்ஸ் பென்ஸ் ஒவசீஸ் ரவல்"




★ உள்நாட்டு வெளிநாட்டு
விமானப் பயணச்சீட்டுக்கள் - குறைந்த செலவில் (ஸ்ரீலங்கன், சிங்கப்பூர், இந்தியன், எமிரேற்ஸ் எயர்லைன்ஸ், கட்டார், எயர்வேஸ் போன்ற சகல விமானச்சீட்டுக்களும் பெறலாம்)
★ திகதி மாற்றம், விமானச்சீட்டு உறுதிப்படுத்துதல்
★ பாஸ்போட்/Hotel Booking போன்ற சேவைகளுடன்,
★ சர்வதேச விமானப் பயணம் சம்பந்தமான சகல ஆலோசனைகளும் (வீசா உட்பட) வழங்கப்படும்.

விவரங்களுக்கு : 56/15 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம் (யாழ். பெரிய தபால் கந்தோர்). T.P.: 021-222-3771

(G-36355)


## பெண் விடுதி மேற்பார்வையாளர் தேவை

யா/இராமநாதன் கல்லூரி பெண் விடுதியை மேற்பார்வை செய்வதற்கு மேற்பார்வையாளர் ஒருவர் தேவை.

பின்வரும் தகுதியுடையோர் விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்பதாரியிடமிருந்து பின்வருவன எதிர்பார்க்கப்படுகின்றன.**

1. வயது 35 இற்கு மேல்
2. கல்வித் தகைமை குறைந்தது க.பொ.த.சாதாரணதரம்
3. குடும்பப் பொறுப்பற்றவர்கள் விரும்பத்தக்கது. (விடுதியில் தங்கியிருத்தல் வேண்டும்)
4. சைவப்பாரம்பரியம் பேணுபவராக இருத்தல்வேண்டும்.
5. சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.
6. குறித்த திகதிக்கு முன்னர் அதிபர், இராமநாதன் கல்லூரி, சுன்னாகம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விண்ணப்பமுடிவு திகதி: 15.08.2004

அதிபர்,
(சி-36603)(34-13-15) இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜூலை29

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவின் 87 ஆவது தொடர் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் உள்ள நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெறும்.

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்னும் தலைப்பில் இராம ஈஸ்வரன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். (எ-201)

## தென்மராட்சி வலயப் புதிர்ப்போட்டிகள்

தென்மராட்சி,ஜூலை29

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான கணித, விஞ்ஞானப் பாடப் புதிர்ப்போட்டிகள் அடுத்த மாதம் எட்டாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்குச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களைப் பொறுப்பான ஆசிரியருடன் அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (எ-117)

## தமிழ்த்தினப் போட்டி; திகதியில் மாற்றம்

தென்மராட்சி,ஜூலை29

தென்மராட்சிக் கல்வி வலயத்தினால் எதிர்வரும் முதலாம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப்படவிருந்த தமிழ்த்தினப் போட்டிகளில் பின்வரும் போட்டிகள் எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இசையும் அசைவும், நடனம் தனிப்பிரிவு-1, நடனம் - குழு பிரிவு - 1 ஆகிய போட்டிகளே 31 ஆம் திகதி நடைபெறுமெனவும் -

அதற்கான மாணவர்களைப் போட்டிகளில் தவறாது கலந்துகொள்ளுமாறும் - வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.(எ-117)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் மாதரசியாக | விண்ணில் விடிவெள்ளியாக |
|---|---|
| 12 - 11 - 1929 | 10 - 08 - 2003 |

### திருமதி புவனேஸ்வரி திருச்செல்வன்

திதி: பூர்வபக்க திரயோதசி

*அன்னையே நீ மறைந்து ஆண்டொன்று ஆனதம்மா!*
*புன்னகை பூத்த உங்கள் முகம் கண்களுக்குள்ளும்*
*பொன்னான உங்கள் நினைவுகள் நெஞ்சினிலும்*
*என்றும் நீங்காது நிலைத்திருக்கும் அம்மா!*
*விண்ணுறையும் தெய்வங்களாக அப்பாவும்*
*நீங்களும் எம்மை வழிநடத்துவீர்கள்.*
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

தகவல்:
திருமதி
சிவகாமி தர்மபாலா
இளவாலை.

(34622)(34-13-15) - குடும்பத்தினர்.

## 9ஆம் ஆண்டு நினைவலைகள்



| வையத்துள் அறிமுகம் | தெய்வத்துள் சங்கமம் |
|---|---|
| 19 - 10 - 1935 | 08 - 08 - 1995 |

### அமரர் தம்பிராஜா கனகரட்ணராஜா

திதி: 29.07.2004

பாசத்தின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி அரவணைத்த
எம் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஒன்பது ஆண்டுகள் அல்ல எத்தனையோ ஆண்டுகள்தான்
சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களை விட்டு என்றும் மாறாதையா!

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கும்:*

அன்பு மனைவி, மைத்துனர்கள்,
சகோதரிகள், மைத்துனிகள், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சந்தையடி,
மானிப்பாய்.

(34651)(42-34-13-15)

## எதியோப்பிய கண்ணிவெடி நிபுணர்கள் வவுனியா நிலைமையை ஆராய்ந்தனர்

வவுனியா,ஜூலை29

வவுனியா மாவட்டத்துக்கு வந்த எதியோப்பியக் குழுவினர் வவுனியாவின் நிலைமை தொடர்பாகவும் வவுனியாவில் கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பாகவும் வவுனியா அரச அதிபருடன் கலந்தாலோசித்தனர்.

எதியோப்பிய நாட்டில் கண்ணிவெடி அகழ்வுக்குப் பொறுப்பான அதிகாரி டெக்வோஸ் மென்குசா தலைமையிலான 4பேர் இக்குழுவில் அடங்கியிருந்தனர்.

எதியோப்பிய நாட்டின் கண்ணிவெடி அகற்றும் பிரிவில் சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 782 பேர் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களில் 74 ஆயிரத்து 577 ஆண்களும் 56 ஆயிரத்து 205 பெண்களும் தற்போது கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

இக்குழுவினர் உலகளாவிய ரீதியில் ஒரு கோடி 10லட்சம் கண்ணிவெடிகளை அகற்றியுள்ளனர். அத்துடன், இக்குழுவினரால் உலகளாவிய ரீதியில் 137 கோடி 20 லட்சம் சதுரமீற்றர் பரப்பளவு சுத்தம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்டிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது 19பேர் இறந்தும் 87 பேர் காயமடைந்தும் இருக்கின்றனர்.

இவர்களின் பணிகளை இலங்கையில் விரைவாக ஆரம்பிப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. (ஐ-204)

## சேவைநலன் பாராட்டுவிழா



யா/பன்னாலை சேர். கனகசபை அ.த.க.பாடசாலையில்
01.01.1994 முதல் 20.07.2004 வரை அதிபராகக்
கடமையாற்றி தனது 60 ஆவது அகவையில்
ஓய்வுபெற்ற அதிபர்

### திரு.நா.ஆனந்தராசா (இ.அ.சே.தரம் 2.I)

அவர்கள் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாய் வாழ எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் பாடசாலையினைப் பாதுகாத்து திறம்பட நிர்வகித்த மேற்படி அதிபரின் சேவையினைப் பாராட்டி சேவைநலன் பாராட்டு விழா 30.07.2004 (வெள்ளிக்கிழமை) பி.ப. 2.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவிற்கு வருகைதந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்,
(34637)(34-15-17) பன்னாலை வாழ்மக்கள்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்
திருமதி ஜெ.உதயகுமார் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கிருஷ்ணபிள்ளை இரத்தினம்

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம் தேசிய
கல்வியியற் கல்லூரிச் சமூகம்.

(34655)(42-34-15-17)

## கண்ணீர் அஞ்சலி

சுதுமலை, ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய முன்னாள்
காரியதரிசியும் ஓய்வுபெற்ற ஆசிரியரும், சுதுமலை
இந்து சமய விருத்திச் சங்கத் தலைவருமான


### சேதுகாவலர் பொன்னம்பலம்

அவர்களின் மறைவு குறித்து சுதுமலை முருகமூர்த்தி தேவஸ்தான பரிபாலனசபையினர் ஆகிய நாங்கள் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கவலையையும் அவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன், அமரருக்குக் கண்ணீர் அஞ்சலிசெலுத்தி அன்னாரின் ஆத்மாசாந்திபெற முருகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சுதுமலை ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தான
(34652)(34-15-17) பரிபாலனசபையினர்.

# ஆசியக்கிண்ணப்போட்டித் தொடரில் இலங்கை அணிக்கு முதற்தோல்வி



ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இலங்கை - இந்திய அணிகளுக்கிடையே நேற்று முன்தினம் கொழும்பு ஹெத்தாராம மைதானத்தில் நடைபெற்ற மிகவும் விறுவிறுப்பான ஆட்டத்தில் இலங்கை அணியை 4 ஓட்டங்களால் வெற்றியீட்டியதன் மூலம் இந்திய அணி இறுதியாட்டத்தில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.

இதன்மூலம் இந்தப்போட்டித் தொடரில் மூன்றாவது தடவையாக இந்திய அணியும் இலங்கை அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற இரு அணிகளுக்கும் இடையிலான ஆட்டத்தில் இலங்கை அணி 12 ஓட்டங்களால் வெற்றியீட்டியிருந்தது. இலங்கை அணி 4 விக்கெட்டுக்களை இழந்து எடுத்திருந்த 282 ஓட்டஙகளை எடுக்கமுடியாமல் 8 விக்கெட்டுக்களை இழந்து 270 ஓட்டங்களை மாத்திரமே இந்திய அணியால் பெறமுடிந்தது. இதன் காரணமாக 'ஏ' பிரிவில் இரண்டாம் இடத்தையே இந்திய அணிபெற்றது. முதலிடத்தை இலங்கை அணி பெற்றது.

இதன்படி 'ஏ' பிரிவில் முதலிரு இடங்களைப் பெற்ற அணிகளும் 'பி' பிரிவில் முதலிரு இடஙகளைப்பெற்ற அணிகளும் கலந்துகொள்ளும் லீக் போட்டிகள் கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இந்த லீக் போட்டிகளில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி இலங்கை அணியை 4 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றால் மட்டுமே இறுதியாட்டத்துக்குத் தெரிவாகமுடியும் என்ற நிலையில் இருந்த இந்திய அணிக்கு துடுப்பாட்ட வீரர் லக்ஸ்மன் காயமடைந்தமை மற்றும் பாகிஸ்தான் அணியுடன் ஏற்பட்ட தோல்வி என்பன பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. லக்ஸ்மனுக்குப் பதிலாக ஹேமங்பதாணியை அல்லது றொகான்கவாஸ்கரை அழைக்கலாமா என்று அணித்தலைவர் கங்குலியும் பயிற்சியாளர் ஜோன்ரைட்டும் எண்ணியிருந்தனர். ஆயினும், அவ்வாறு எதுவும் செய்யாது இலங்கை வந்த 14 பேர் கொண்ட அணியில் இருந்தே இந்த அணி தெரிவுசெய்யப்பட்டிருந்தது.

இந்தப் போட்டித் தொடரில் சோபிக்காத பாலாஜி, நெஹ்ரா ஆகியோர் நீக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக ஏற்கனவே இத் தொடரில் இரண்டு ஆட்டங்களில் விளையாடிய சஹீர்கான் சேர்க்கப்பட்டதுடன் பார்த்தீவ் பட்டேலும் சேர்க்கப்பட்டிருந்தார். இவ்வாறான நிலையிலேயே இந்திய அணி களம் இறங்கியது.

ஆரம்பத்திலேயே அடித்தாடத்தொடங்கிய டெண்டுல்கரும் ஷேவாக்கும் விரைவாக ஓட்டங்களைக் குவித்தபோதிலும் 18 ஓட்டங்களை எடுத்திருந்த டெண்டுல்கர் சொய்ஸாவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இதனை அடுத்துக் களம்புகுந்த அணித்தலைவர் கங்குலி ஷேவாக்குடன் இணைந்து நல்லதொரு இணைப்பாட்டத்தைக் கொடுத்தார். இவர்கள் இருவரும் இரண்டாவது விக்கெட் இணைப்பாட்டமாக 134 ஓட்டங்களைப் பெற்றனர். ஷேவாக் 81 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஜயசூரியவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்துவந்த துணைத்தலைவர் ட்ராவிட் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த யுவராஜ்சிங் கங்குலியுடன் இணைந்து நல்லதொரு ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 50 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 271 ஓட்டங்களை எடுத்தது. அணியின் சார்பில் ஷேவாக் 81 ஓட்டங்களையும் கங்குலி 79 ஓட்டங்களையும் யுவராஜ்சிங் 50 ஓட்டங்களையும் எடுத்தனர். இலங்கை அணியின் சார்பில் எல்.மலிங்க 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

### ஜெயசூரி

272 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி பெறலாம் என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணிக்கு 2 ஆவது ஓவரில் அதாவது தனது முதல் ஓவரில் 15 ஓட்டங்களைக் கொடுத்தார் சஹீர்கான். இதனால் இந்திய அணிக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டது. ஆயினும், அடுத்த ஓரிரு ஓவர்களில் அடுத்தடுத்து குணவர்த்தனவும் சமன்ஜெயந்தவும் ஆட்டமிழந்ததை அடுத்து இந்திய அணிக்கு சற்றுத் தெம்பு ஏற்பட்டது.

ஆனால், அதிரடி வீரர் ஜயசூரிய 8 ஆவது ஓவரில் 5 பவுண்டரிகள் அடங்கலாக 21 ஓட்டங்களை எடுத்தார். இதனால் சஹீர்கானை விடவும் பாலாஜி பரவாயில்லை என்று இந்திய அணியினர் எண்ணியிருக்கக்கூடும். இந்த நிலையில் அணித்தலைவர் அத்தப்பத்துவும் சங்கக்காரவும் தொடர்ந்து ஆட்டமிழக்க இலங்கை அணி 200 ஓட்டங்களையாவது எடுக்குமா என்ற நிலை காணப்பட்டது. ஆனாலும் மறுமுனையில் ஜயசூரிய ஓட்டங்களை எடுத்தவண்ணம் இருந்தார். இவரும் தில்ஷானும் சேர்ந்து 6 ஆவது விக்கெட்டுக்காக 105 ஓட்டங்களை எடுத்தனர். இறுதியில் 18 பந்துகளில் 18 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் 47 ஆவது ஓவ ரின் முதல் பந்தில் ஜய சூரிய ஆட்டமிழந்தார். 132 பந்துகளைச் சந் தித்த ஜயசூரிய 130 ஓட்டங்களை எடுததார். இது இவரின் 18 ஆவது சதமாகும். இவர் ஆட டமிழந்ததையடுத்து வெற்றிவாய்ப்பு எந்த அணிக்கு என்று தீர்மானிக்க முடியாத அள வுக்கு ஆட்டம் அமைந்தது. கடைசி ஓவரில் 11 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலை யில் 6 ஓட்டங்களை மாததிரமே இலங்கை அணி யால் பெறமுடிந்தது.



மிகவும் விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் 50 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணியால் 9 விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களையே பெறமுடிந்தது. இதனால் 4 ஓட்டங்களால் பரிதாபகரமாகத் தோல்வியைத்தன தாக்கிக்கொண்டது இலங்கைஅணி. 81ஓட்டங்களை எடுத்ததுடன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றிய ஷேவாக் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

### விளையாட்டு

இதன்மூலம் இறுதியாட்டத்தில் விளையாடும் வாய்ப்பை பெற்றது இந்திய அணி. வேகப் பந்துவீச்சாளர் சமிந்தவாஸ், சுழற்பந்துவீச்சாளர் முரளிதரன் ஆகிய இருவரும் இல்லாமலேயே இலங்கை அணி இந்த ஆட்டத்தில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. ஆயினும், 4 ஓட்டங்களால் தோல்வியுற்றமைக்கு இதனைக் காரணமாகக் கூறமுடியாது. எப்படியோ இந்திய அணியும் ஒரு தடவை இத்தொடரில் இலங்கை அணியை வீழ்த்திவிட்டது. இது இத்தொடரில் இலங்கை அணிக்குக் கிடைத்த முதலாவது தோல்வியாக அமைந்துவிட்டது. ★

## தோற்பந்து கிரிக்கெட் போட்டியில் கிளிநொச்சி ம.ம.வித்தியாலயம் பங்கேற்பு

வலி.வடக்கு,ஜூலை29

யாழ். மாவட்டத்தில் நடைபெற்றுவரும் தோற்பந்து கிரிக்கெட் ஆட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் முதற் தடவையாகக் கலந்துகொண்டுள்ளது.

14வயதினருக்கு இடையேயான அஸ்ரா கிண்ணத்துக்கான போட்டியில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அணியினர் முதல் தடவையாகக் கலந்துகொண்டுள்ளனர்.

போதிய வளம் இன்மையுடன் இப்பாடசாலை காணப்படுகின்ற போதிலும் பாடசாலை மாணவர்களின் திறமையை வெளிக்கொண்டு வரும் முயற்சியாக இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை கிரிக்கெட் ஆதரவாளர்களினால் வரவேற்கப்படுகின்றது.

எதிர்காலத்தில் இப்பாடசாலை அணியினர் போதிய பயிற்சிகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவார்களாக இருந்தால், அடுத்தாண்டில் இடம்பெறக்கூடிய சுற்றுப் போட்டிகளில் பிரகாசிக்கக் கூடியவர்களாக மிளிர்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (10-86)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை29

கொக்குவில் மத்திய சனசமூகநிலைய விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

இநத இறுதி ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியும் யாழ். பற்றீசியன் அணியும் மோதவுள்ளன. (10)

★ ★ ★

நவாலி,ஜூலை29

மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு அருணோதய மன்றத்தினால் நாளைமறுதினம் சனிக்கிழமை விளையாட்டுப் போட்டி நடத்தப்படவுள்ளது.

ஆலய முன்றலில் இந்தப்போட்டிகள் நடைபெறவுள்ளன. (10-100)

★ ★ ★

கரவெட்டி,ஜூலை29

தும்பளை கிழக்கு சனசமூக நிலைய நிர்வாகத்தின் கீழ் இயங்கும் தும்பளை சிறுமலர்கள் பாலர்பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில் மைதானத்தில் சட்டத்தரணி சபா.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலர் எஸ்.செந்தகுமார் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். (10-70-201)

## ஒலிம்பிக் போட்டிக்கென 3 ஆயிரம் பதக்கங்கள்

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கான பதக்கங்கள் தயாரிக்கும் பணி அடுத்தவாரம் முழுமையாக நிறைவடையும் என்று அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கிறீஸ் தலைநகர் எதென்ஸ் நகரில் அடுத்த மாதம் 13 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை ஒலிம்பிக் போட்டிகள் நடக்கின்றன. போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப்பிடிக்கும் வீரர், வீராங்கனைகளுக்கு தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்படும். இம்முறை எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்காக மூவாயிரத்துக்கும் அதிகமான பதக்கங்கள் தயாராகி வருகின்றன. இவற்றைத் தயாரிக்கும் பணி எதென்ஸ் நகருக்கு அருகில் பாதுகாப்பாக நடந்து வருகின்றது.

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்காக தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்கள் தலா 986 உம் வெண்கலப் பதக்கங்கள் ஆயிரத்து 150 உம் தயாராகின்றன. ஜிம்னாஸ்டிக் உள்ளிட்ட சில போட்டிகளில் மூன்றாம் இடம்பிடிப்பவர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருக்கும் என்பதால் வெண்கலப் பதக்கங்கள் அதிகமாகத் தயாராகின்றன.

பதக்கங்கள் ஒவ்வொன்றும் 150 கிறாம் எடையும், 6 சென்ரிமீற்றர் குறுக்களவும் கொண்டதாக இருக்கும்.

பதக்கங்கள் தயாரிக்கும்பணி ஏறக்குறைய முடிந்துவிட்டது. அடுத்தவாரம் பதக்கங்கள் ஒலிம்பிக் அமைப்பினரிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)

## 5 ஓவர்கள் கிரிக்கெட் போட்டியில் கே.சி.சி.சி. அணி சம்பியன்

வலிவடக்கு,ஜூலை29

யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திய 5 ஓவர்கள் கொண்ட 6 பேர் பங்குபற்றும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் வெற்றிக்கிண்ணத்தைத் தட்டிச்சென்றது.

இறுதியாட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூகநிலைய விளையாட்டுக்கழகமும், சுன்னாகம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகமும், கந்தரோடை ஸ்கந்தவரோதயாக்கல்லூரி மைதானத்தில் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

க.தினேஷ் 33 ஓட்டங்களையும் துஷ்யந்தன் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

கொக்குவில் மத்திய விளையாட்டுக்கழகத்தின் சார்பில் க.கிருபாகரன் 9 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூகநிலைய விளையாட்டுக் கழகம் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 67 ஓட்டங்களைப் பெற்று, வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் சி.சபாநாத் ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்களைப் பெற்றார்.

இவர் 16 பந்துகளைச் சந்தித்து 50 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். இதில் 7 பவுண்டரிகளும் இரண்டு சிக்சர்களும் அடங்கும்.

பந்துவீச்சில் ஜொனிற்றன் 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

ஆட்டநாயகனாக கொக்குவில் மத்திய சனசமூகநிலைய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சி.சபாநாத் தெரிவுசெய்யப்பட்டார்.

வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கா.அருள்வேல் வழங்கிக் கௌரவித்தார். (10-86)

## இங்கிலாந்து - மேற்கிந்திய டெஸ்ட்டின் முதல்போட்டியில் இங்கிலாந்து வெற்றி

லண்டன்,ஜூலை29

இங்கிலாந்து - மேற்கிந்திய அணிகளுக்கு இடையே இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டியில் இங்கிலாந்து அணி 210 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி தனது முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 568 ஓட்டங்களை எடுத்தது. அணியின் சார்பில் றொபேட்ஸ் 221 ஓட்டங்களையும் ஸ்டாஸ் 137 ஓட்டங்களையும் அணித்தலைவர் வோகன் 103 ஓட்டங்களையும் எடுத்தனர்.

மேற்கிந்திய அணி தனது முதல் இனிங்ஸில் 416 ஓட்டங்களை எடுத்தது. சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 128 ஓட்டங்களை எடுத்தார். இதனால் 152 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த இங்கிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 325 ஓட்டங்களுடன் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இரண்டாவது இனிங்ஸிலும் அணித்தலைவர் வோகன் சிறப்பாக ஆடி ஆட்டமிழக்காமல் 101 ஓட்டஙகளை எடுத்தார்.

477 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றிபெறலாம் என்ற இலக்குடன் தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 267 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 210 ஓட்டங்களால் தோல்வியுற்றது. இரண்டாவது இனிங்ஸிலும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 97 ஓட்டங்களை எடுத்தார்.

இங்கிலாந்து அணியின் சார்பில் ஆஷ்லி கில்ஸ் 9 விக்கெட்டுக்களையும் மேற்கிந்திய அணியின் சார்பில் கொலின்ஸ் 7விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக ஆஷ்லி கில்ஸ் தெரிவானார். (10)



# அரசாங்க அறிவித்தல்

## யாழ். மாவட்டச் செயலகம்

## அலுவலக உபகரணங்கள் வழங்குதலுக்கான கேள்வி

யாழ். மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்குத் தேவையான பின்வரும் பொருள்களை வழங்குவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவத்தையும், பொருள்கள் தொடர்பான விவரங்களையும், நிபந்தனைகளையும் மாவட்டச் செயலகக் களஞ்சிய நலன்புரிக்கிளையில் அலுவலக நாள்களில் மு.ப. 9.30 மணிதொடக்கம் பி.ப. 4.00 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை, *அரச அதிபரும் மாவட்டச் செயலாளரும், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்* எனும் முகவரியிடப்பட்டு மேலுறையின் இடதுபக்க மேல்மூலையில் *"அலுவலக உபகரணங்கள் வழங்குதலுக்கான கேள்வி விண்ணப்பம்"* எனக் குறிப்பிட்டு 2004.08.23 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகக் கேள்விப் பெட்டியிலோ இடப்படல்வேண்டும். அன்றையதினம் பி.ப. 3.00 மணிக்குக் கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

1. உருக்கு அலுமாரி
2. உருக்குக் கோவை அலுமாரி
3. உருக்குப் பதவிநிலை உத்தியோகத்தர் மேசை
4. பிளாஸ்ரிக் கதிரை
5. கணனி மேசை
6. கணனி அறைக் கதிரை
7. புகைப்படப் பிரதி இயந்திரம் (Canon)
8. றோணியோ இயந்திரம் (SuperFax)
9. பக்ஸ் இயந்திரம் (Canon)
10. UPS
11. Printer (Epson LQ 2180)
12. Printer (Epson LQ 300)
13. Stand Fan
14. Computer Monitor

**செ. பத்மநாதன்**
அரச அதிபரும், மாவட்டச் செயலாளரும்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(சி-36612) (24-34-19-17)

# கண்ணீர் அஞ்சலி

கைதடி அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலையின்
சித்த வைத்திய அதிகாரியும்
தற்போது இந்தியாவில் M.D.கற்கைநெறி மாணவியுமாகிய
செல்வி பொ.கலைச்செல்வி
அவர்களின் அன்புத் தந்தை

**சேதுகாவலர் பொன்னம்பலம் J.P.**

அவர்கள் 26-07-2004 இல் இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்துக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கிறோம்.

அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை, கைதடி. — வைத்திய பொறுப்பதிகாரியும். வைத்திய உத்தியோகத்தர்களும், சக உத்தியோகத்தர்களும்.

(34666) (26-34;19-17)

# ஆத்ம சாந்தி அஞ்சலி



அஷ்டலக்ஷ்மி பதிப்பக உரிமையாளரும்,
கைதடி சைவச்சிறுவர் இல்ல ஸ்தாபகரும்,
மரண விசாரணை அதிகாரியும் சிறந்த சமய,
சமூக சேவையாளரும், கைதடி ஸ்ரீசச்சிதானந்த
ஆச்சிரம நிர்வாகத்தின் ஆரம்பத் தலைவரும்
அகில இலங்கைச் சமாதான நீதவானுமான
வையத்துள் வாழ்ந்து 21.07.2004 இல்
தெய்வத் திருவடி நிழலில் இணைந்துகொண்ட

**அமரர் குலபதி கலாநிதி ஆறுமுகம் கந்தையா B.A.**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இதய அஞ்சலியைச் செலுத்துவதோடு, குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மசாந்திக்காக குருவருளை வேண்டிநிற்கின்றோம்.

20-08-2004 இல் இடம்பெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அஞ்சலி நிகழ்விலும் சமய சமூகத் தொண்டர்கள், பெரியார்கள் கலந்துசிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரமம், கைதடி.

(34659)(42-34-19-17)

# நன்றி நவில்கின்றோம்

25-07-2004 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி திருமதி மகேஸ்வரி அம்பலவாணர் அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு எமது இல்லம் நாடி ஓடோடி வந்து உதவிகள் புரிந்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், தொலைபேசியில் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் அன்னார் நோயுற்றிருந்தவேளை வைத்திய உதவிகள்புரிந்த எமது குடும்ப வைத்தியர் Dr.பாலசுப்பிரமணியம், Dr.கலைவாணி. இ.வசந்தன் ஆகியோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் எமக்கு உதவிகள்புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*'அக்கா அகம்',*
*கே.கே.எஸ். வீதி,*
*இணுவில் மேற்கு.*

- அ.கிருபாமூர்த்தி,
(மகன்).

(34662)(42-34-17-19)

## கட்டட வேலைகள் விரைவில்பூர்த்தியாகும்

சிறுகைத்தொழில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் கந்தரோடையில் அமைக்கப்பட்டுவரும் விவசாய களஞ்சியக் கட்டட வேலைகள் முடிவடையும் நிலையில உள்ளன. கந்தரோடையைச் சேர்ந்த அருளாநந்தப் பிள்ளையார் ஆலயப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ இராமலிங்க ஐயர் சோமேஸ்வர சர்மாவினால் அன்பளிப்புச்செய்யப்பட்ட நான்கு பரப்புகாணியில் விவசாயக் களஞ்சியம் அமைக்கப்பட்டு வருகின்றது. கடந்தவருடம் ஆரம்பிக்கப்பட்ட விவசாயக் களஞ்சியச்சாலையின் கட்டடவேலைகள் முடிவடைந்ததும் விவசாயப் பொருள்களைக் களஞ்சியப்படுத்தும் வசதிகள் விவசாயிகளுக்குச் செய்துகொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-152)

## விற்பனைக்கு

நலல நிலையிலுள்ள ஜெனரேட்டர் (குவாட்டா), வோசின் மெசின், சீடிப்பிளேயர், டிஸ் அன்ரனா றிசீவர், எல்.எம்.பி. ரைப்பிங் மெசின் (ஆங்கிலம்), லுமாலா சைக்கிள் (பெணகள்) மற்றும் பலகைகள் என்பன விற்பனைக்குண்டு.

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**ச.சதானந்தன்,**
புலவனார் வீதி. கல்வியங்காடு
(பார்வையிடும் நேரம்:காலை 10மணி தொடக்கம் மாலை 4 மணிவரை). (C/36612)

## யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்

### பதவி வெற்றிடம்

யாழ். மாவட்டத்தில் 'யுனிசெவ்' அனுசரணையுடன் யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தால். மிதிவெடியால் பாதிக்கப்பட்டோர் புனர்வாழ்வு உதவித்திட்டத்திற்கு என ஒப்பந்த அடிப்படையில் கீழ் குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி: வெளிக்கள புனர்வாழ்வு உதவியாளர்கள்
சம்பளம்: ஒரு மாத பயிற்சியின் பின், மாதாந்த வேதனம் ரூபா 6,000/=

தகைமைகள்:
1) க.பொ.த. (சா/த) சித்தி, (விஞ்ஞானம் உட்பட) அத்துடன், க.பொ.த. (உ/த) சித்தி.
2) ஆங்கில தேர்ச்சி, அறிக்கை தயாரித்தல், கணனி அறிவு
3) மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

வயது: 21-35 வயதுக்கு உட்பட்டவர்கள்

ஆண். பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை தமது சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட சுயவிவரம். சான்றிதழ்களின் போட்டோப் பிரதியுடன் 06.08.2004 அன்று அல்லது அதற்கு முன்னர் கீழ்க்குறிப்பிட்ட முகவரிக்குக் கிடைக்குமாறு அனுப்பிவைக்கவும்.

தலைவர்,
யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்,
இல.05, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(34665)(34-19-17)

## மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
## வடக்கு - கிழக்கு மாகாண சபை
## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (கார்ப்)
## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ" கடன் இல.2043 - SRI(SF)

# கேள்வி அறிவித்தல் இல.31

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் (கார்ப்) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் ஒருபகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2 தன் பின்னகத்து தொழில்தருநராக குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாகக் கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | MN/CAARP/HS/03 | மன்னார், முருங்கன் மாவட்ட வைத்தியசாலையில் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு நிர்மாணம் | M5 (கட்டடங்கள்) | 1,41000/= |
| 02 | VA/CAARP/HS/01 | வவுனியா ஆயுர்வேத வைத்தியசாலையில் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு, மருந்தகம் மற்றும் சமையலறை நிர்மாணம் | M5 (கட்டடங்கள்) | 1,45000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   i. நிருமாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   ii. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (NCCASL உறுப்பினராக (ICTAD) மேற்படி M7 இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) விளங்கவேண்டும்.
   iii. கடந்த ஐந்து வருடங்களில் ஆகக்குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களை திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த 5 வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையை கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து பெறப்பட்ட சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிபடுத்தப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழுநிரலொன்று வழங்கப்படல் வேண்டும்.
   iv. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக்கொண்டிருக்கவேண்டும்.
   v. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
   vi. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.
4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 026-2227434, தொலைநகரி 026-2227401, மின்னஞ்சல் necord@sltnet.lk)
6. ஒப்பந்த ஆவணங்களை 2004 ஆடி 29 இல் இருந்து 2004 ஆவணி 13 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/= செலுத்தி கொள்வனவுசெய்யப்படலாம்.
7. கேள்விகோருவோர் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இருஉறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்கவேண்டும்.
8. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப்பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், கேள்விச்சபை, NECORD 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு 2004 ஆவணி 20 முற்பகல் 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்க அனுப்பப்படல்வேண்டும் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கமுடியும்.
9. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று 2004 ஆவணி 13 முற்பகல் 11.30 இற்கு NECORD, 140 மின்சாரநிலைய வீதி, திருகோணமலை என்ற முகவரியிலுள்ள எமது காரியாலயத்தில் நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**த.லங்காநேசன்,**
கேள்விச் சபைத்தலைவர், வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்,
140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை.

(சி-36615)(34-17-13)

# கண்ணீர் அஞ்சலி

## சே.பொன்னம்பலம் J.P. அவர்கள்

(தலைவர்.சுதுமலை இந்துசமய விருத்திச் சங்கம்)

நீண்ட காலமாக எமது சங்கத்தின் தலைவராக இருநது அதன் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றி 26.07.2004 இல் இறைவன் திருவடியை அடைந்த சே.பொன்னம்பலம J.P. அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுதுதுகின்றோம்.

அன்னாரின் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பால் வருந்தும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளை வேண்டுகின்றோம்.

சுதுமலை இந்து சமய
விருத்திச் சங்க உறுப்பினர்கள்.

(34637)(40-11-12)

# கண்ணீர் அஞ்சலி

சுதுமலை தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட ஓய்வு பெற்ற அதிபர்
**சே.பொன்னம்பலம்** J.P.
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்தின் முன்னாள் ஆசிரியர்களான திருமதி இ.பொன்னம்பலம், திருமதி க.இளங்கோ ஆகியோரின் துன்பத்தில் பங்குகொண்டு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சுதுமலை சிந்மயபாரதி
வித்தியாலயம், மானிப்பாய். (34680) (43-11-12)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
12
02
1927



மறைவு
29
06
2004

அமரர்
## நாகலிங்கம் முருகேசு

(பிரபல வர்த்தகர் மூளாய்)

எமது குடும்பத் தலைவரின் மறைவின்போது எமது துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றிகள்.

அன்னாரின் ஆத்மசாந்திக்கிரியைகள் இன்று நடைபெறும்.

வைகுண்டபதி,
மூளாய் கிழக்கு, சுழிபுரம் (34682)(43-11-12)

- குடும்பத்தினர்.

# 45 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
25 - 01 - 1955



மறைவு
15 - 06 - 2004

## அமரர் கந்தையா சபா

எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (29.07.2004) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்றன. அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முருகன் வீதி, பாரதிபுரம்
திருநெல்வேலி.
(34672)(40-11-12)

தகவல்:
பேரின்பநாயகம் மல்லிகாதேவி
(சகோதரி)

# 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
29
04
1974



மறைவு
29
06
2004

அமரர்
## சச்சிதானந்தசிவம் ஞானசீலன்

*அன்பின் திருவுருவே ஞானசீலன்*
*அந்தி சாயும் முன் உன்*
*இளமை சாய்ந்ததுவோ?*
*காலனின் விளையாட்டில்*
*கைசிக்கிய பொம்மையானாயோ?*
*உன்னை நினைக்கையிலே*
*உள்ளம் உருகுதடா சீலா!*

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.18, மதவடி லேன்,
திருநெல்வேலி. (34664)(40-11-12)

யாழ்.நண்பர்கள்.

---

யாழ். பல்கலைக்கழக
முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர்
**பொ.பாலசுந்தரம்பிள்ளை**
அவர்களின் அருமைத் தாய்
## திருமதி பொன்னுத்துரை
நாகரத்தினம் ஆசிரியை அவர்களின்
மறைவு குறித்து இரங்கல் அஞ்சலி



பேரான இராமநாதன் கல்லூரி தன்னில்
பெருமையுடன்
ஆசிரியப் பயிற்சிபெற்ற அம்மையே!
சீராரும் புகழ்மேவு வேலணைப்
பதிதந்த பெருமாட்டி
நாகரத்தினம் எனு நாமம் கொண்டோய்
சீரான சிறப்புக்கள் பலவும் கொண்ட
மனைத்தக்க மாண்புடைய மாதே
குலவிளக்கே!
பேரான பன்னிரண்டு மக்களுக்குத்
தாயான பெருமையுடன்
பாரிதனை விட்டு நீர் சென்ற தெஙகே.

முப்பதொடு ஒன்பது ஆண்டுகள்
ஆசிரியப் பணியில்
அயராது உழைத்து உள மகிழ்ந்த தாயே!
தப்பாதே மாணவர் மனதில் பெரும்
முத்திரை பதித்தாயம்மா
இத்தரையில் நன் மதிப்புக்கள்
பலவும் பெற்றாய்
தப்பித்தும் மாணவர்கள் நின்றிடாது
சிறுவர்களைக் கல்வியூட்ட அழைத்துச்
சென்ற காட்சி மறவோம்
இப்புவியில் மாணவர் பலரை உருவாக்கிய
பெருமையுடையோய்
ஒரு நாளுமுன் சேவைதனை
உலகம் மறந்திடாதே
நின் ஆன்மா சாந்தி பெறுக.
ஓம் சந்தி சாந்தி சாந்தி.

*யா/இராமநாதன் கல்லூரி சமூகமும்,*
*பழைய மாணவர் சங்கமும்*

(சி-36621)(43-11-12)

---

## கல்லூரித் தினவிழா

**யா/புனித ஹென்றியரசர் கல்லூரி**
**இளவாலை**

மேற்படி கல்லூரித் தினவிழா 31.07.2004 (சனிக்கிழமை) மு.ப 7.30 மணியளவில் திருப்பலியுடன் ஆரம்பமாகும்.

இவ்விழாவில் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

புனித ஹென்றியரசர் கல்லூரிக் குடும்பம்
இளவாலை.

(34679) (40-11-12)

---

## தவறிவிட்டன

நில அளவையாளரின் நில அளவைப் படம் வரைதல் தொடர்பான பெறுமதி வாய்ந்த ஆவணங்களும் மற்றும் Computer FX 880P, கம்பியூட்டர் பிறிண்டர் இணைப்பு வயர், கையடக்கத் தொலைபேசி இணைப்பு வயர்கள் என்பன அடங்கிய பாக் கொடிகாமத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பஸ்ஸில் 27.07.2004 அன்று பிற்பகல் தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் சோ.முருகதாஸ், ஆஸ்பத்திரி ஒழுங்கை, மானிப்பாய் என்ற முகவரியுடன் தயவு கூர்ந்து தொடர்புகொள்ளவும்.

(34685)(43-11-12) T.P 021-222 2757

---


**நாகம்ஸ்** சுன்னாகம்

சிம்பு, ரம்மியா, விஜயகுமார், கர்ணாஸ் நடித்த

**குத்து**

காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)

(C/35739)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

M.G.R. (இருவேடம்), லதா, மஞ்சுளா, நம்பியார் நடித்த

நினைத்ததை முடிப்பவன் (ரீல்)

தினசரி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெகுவிரைவில்
ராமகிருஷ்ணா

வெள்ளி, சனி, ஞாயிறு
Random Hearts இரவு 8.45 (பு.நே.)

(C-36305)

**ராஜா** யாழ்ப்பாணம்

அர்ஜுன், மீனா, நெப்போலியன் நடித்த

அன்பு சகோதரன்

புதியநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30.

(சி-36364)


---

# மரண அறிவித்தல்கள்

## தேவராசா ராஜ்மோகன்



கோப்பாய் மத்தி, சூசையப்பர் கோயிலடியைச் சேர்ந்த தேவராசா ராஜ்மோகன் 27-07-2004 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தேவராசா மற்றும் காலஞ்சென்ற ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் ஜெகஜீவன், அன்புக்கரசி, காலஞ்சென்ற பிலிப் டயஸ் மற்றும் கலையரசி (முதலாம் வருட மாணவி, Q.S.தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுப்பிர மணியம் மற்றும் அன்னம்மா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29-07-2004) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லடக்கத்துக்காக கோப்பாய் புனித சூசையப்பர் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*
(34671)(26-11-12)

தகவல்:
வே.தேவராசா *(தந்தை)*.

## ஆறுமுகம் கந்தசாமி (S.A.K.)



இணுவில் மேற்கைச் சேர்ந்த ஆறுமுகம் கந்தசாமி (S.A.K.) அவர்கள் நேற்று (28.07.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் தனபாலசிங்கம், தனபாக்கியம், பாலசுந்தரம், காலஞ்சென்ற சதாநந்தசிவம் மற்றும் கமலாவதி, கருணானந்தசிவம் ஆகியோரின் அன்புத் தந்தையும் தருமயோகம்மா, ரத்தினம், அன்னபூரணம், இராஜேந்திரம், மங்களேஸ்வரி, பாஸ்கரன், நிலாவதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2004) வியாழக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பி.ப. 3.00 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விக்கினேஸ்வரா லேன்,*
*இணுவில் மேற்கு,இணுவில்.*
(34687)(40-11-12)

தகவல்:
K.இராஜேந்திரம் (மருமகன்).

## நாகநாதர் பொன்னம்பலம் தேவராசா

**(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)**

யாழ்ப்பாணம்-கொக்குவில் கிழக்கு, புதுக்கோவிலடியைப் பிறப்பிடமாவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட நாகநாதர் பொன்னம்பலம் தேவராசா அவர்கள் 26.07.2004 அன்று லண்டனில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் இந்திராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-செல்வம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (The Malayan Trading Co-Jaffna) - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான நடராசா (Retired Railway Head Guard), இராஜேஸ்வரி, பொன்னையா, மகாராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் புகனராணி, விமலராணி, தபேந்திரன் (The Malayan Trading Co-Jaffna), தருமேந்திரன், வசந்தராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரவிமோகன் (Canada), சொரூபி (London), ரகு (Canada), ரணாமோகன் (London) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யசோதரா, இராமகிருஷ்ணன், சுகன்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருஷான், அபர்ணா, அஷான், துஷான், திரிஷான், ரோஷான் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரி இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2004) வியாழக் கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்திராணி, சொரூபி,
ரணாமோகன் - 2083649600
ரவிமோகன் - 416 - 2919956
ரகு - 905 - 883 - 0524

தகவல்:
ந.சச்சிதானந்தன் (கொழும்பு)
(பெறாமகன்).
(34684)(12-11-43)

## திருமதி சண்முகலிங்கம் சரஸ்வதி



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சண்முகலிங்கம் சரஸ்வதி கடந்த (26.07.2004) திங்கட் கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் செல்லாச்சியின அன்பு மகளும் காலஞ்சென்ற சண்முகலிங்கத்தின அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - நாகம்மாவின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, வீரசிங்கம், தர்மலிங்கம் மற்றும் நவரத்தினம் (கனடா), மகாலிங்கம் (கனடா), நல்லம்மா, இராஜேஸ்வரி, புஸ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரகுமாரி (ஹொலண்ட்), சதயகுமார் (ஹொலண்ட்), அசோக்குமார் (சுவிஸ்), மைதிலிகுமாரி (ஹொலண்ட்), கஜனகுமாரி (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இரத்தினகுமார் (ஹொலண்ட்), அசோகினி (ஹொலண்ட்), சிவநாதன் (லண்டன்) மற்றும் கமலினி, நந்தினி, சுதாகரன், பிரபாகரன், நக்கீரன், சர்வானந்தம், சத்தியதேவி, சாரதாதேவி, சந்திராதேவி, ஆகியோரின் அன்பு மாமியாரும் மகிழ்மணி, பாக்கியம், அன்னலக்ஷ்மி (கனடா), திருஞானசம்பந்தர், ஆனந்தராசா (யாழ்போதனா வைத்தியசாலை), சத்தியசீலன் ஆகியோரின் மைத்துனியும் திவாகரன், அனுஷா, கிரிஷா, சர்மிலா, நிருஷா, ஜஜிதரன், பாமினி, சியாமினி, சுதர்சினி, கிரிதரன், விஜயரட்ணம், சோதிலிங்கம் ஆகியோரின் பெரிய தாயும் ஜெயந்தன், சுகிர்தா, அகிலன், தீபா (யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்), துசாந்தி, துசாந்தன், சர்மினி, துர்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2004) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வடக்கு இருளன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கற்பகவிநாயகர் ஆலய வீதி,*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*
(34678)(43-11-12)

தகவல்:
குடும்பத்தினர்.

# முஸ்லிம் - புலிகள் நேற்றுச் சந்திப்பு

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அம்பாறை மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பு நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் - முஸ்லிம் மக்களின் காணிப் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து சுமுகநிலையைக் கட்டியெழுப்புவதற்கு விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமிடையே சந்திப்புக்கள் இடம்பெற்றுவந்தன.

கருணா விடயம் ஆரம்பித்ததிலிருந்து இச சந்திப்புக்கள் இடைநிறுத்தப்பட்டன.

நேற்று மாலை தம்பிலுவிலுள்ள விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. விடுதலைப் புலிகள் சார்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் த. குயிலின்பன், அம்பாறை மாவட்ட தமிழர் மேம்பாட்டு பேரவையின் தலைவர் ந.தர்மலிங்கம் ஆகியோரும் - முஸ்லிம் பிரதிநிதிகள் சார்பில் அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் செயலாளர் எம்.இம்கிராகிம், மௌலவி முனாஸ், மௌலவி ஹரீம் உட்பட பல புத்திஜீவிகள் கலந்துகொண்டனர்.

நீண்டகாலமாக இத்தகைய சந்திப்பு தடைப்பட்டது தொடர்பாக ஆராயப்பட்டது. எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி அக்கரைப்பற்றில உள்ள தமிழர் மேம்பாட்டுப் பேரவையின் அலுவலகத்தில் மீண்டும் சந்தித்துக் கலந்துரையாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## படை அதிகாரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனுதாரர்கள் சார்பாக மனித உரிமைக்கும அபிவிருத்திக்குமான அமைப்பின் சட்டத்தரணி எம்.றெமிடியஸின் அனுசரணையுடன் சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தியும், எதிர் மனுதாரர்களான முதலாம், மூன்றாம், நான்காம நபர்கள் சார்பாக அரச சட்டத்தரணி செல்வி சுகந்தி கந்தசாமியும் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

இந்த வழக்கில் படையதிகாரிகளான மூன்று எதிர்மனுதாரர்களையும் எதிர்வரும் 11 ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்ட நீதிவான்-

இவர்களுக்கான அழைப்பாணைகளில் முதலாம், மூன்றாம் எதிர் மனுதாரர்களுக்கான அழைப்பாணைகள் கொழும்பு மாவட்ட நீதிமன்ற பிஸ்கால் ஊடாகவும், இரண்டாம் எதிர் மனுதாரரான பலாலிப் படைத்தள தலைமை அதிகாரிக்கான அழைப்பாணையை மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பிஸ்கால் ஊடாகவும் அனுப்பி வைக்குமாறும் உத்தரவிட்டார். (ஐ-5)

# தமிழர் நலனுக்கு எதிராக இந்தியா செயற்படாது என்பதில் நம்பிக்கை

### நட்வர்சிங்கை சந்தித்தபின் வைகோ தகவல்

லண்டன்,ஜூலை29

இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் என்பது இலங்கை அரசு இந்திய அரசை தனகக்குச் சாதகமாகப் பயன்படுதிக் கொள்ள எண்ணும் முயற்சி, அது நடக்காமல் பாடுபடுவேன், இலங்கைப் பிரச்சினையில் தமிழர் நலனுக்கு எதிராக இந்தியா செயற்படாது என்று தனக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது என்றார் - ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங்கை டில்லியில் சந்தித்து இலங்கைப் பிரச்சினை குறித்து விவாதித்த பிறகு, தமிழோசைக்கு அளித்த செவ்வியில் வைகோ இவ்வாறு கூறினார்.

அண்மையில் பெங்களூர் தமிழர் மாநாட்டில் பங்கேற்க வந்த இலங்கைத் தமிழர் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் கொழும்புக்குத் திரும்ப அனுப்பப்பட்ட சம்பவம் பற்றியும் நட்வர்சிங்கிடம் பேசினேன், அது அதிகாரிகள் மட்டத்தில் நடந்த செயல், இனி அவ்வாறு ஒரு சம்பவம் நடக்காது என்று எனக்கு நம்பிக்கை உண்டு என்கிறார் வைகோ.

## சிறையிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், நீதிச் சேவை ஆணைக்குழு அதிகாரி ஆகியோருடன ராஜபக்ஷவை யாழ்.சிறைச்சாலையில் வைப்பது தொடர்பாகப் பேசியுள்ளேன். எந்தவித பிரச்சினையுமின்றி இங்கு வைத்திருக்கலாம் என்று நீதிபதி, சிறைச்சாலை அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

தேவைப்படும் பட்சத்தில் ராஜபக்ஷவை நீதிமன்றத்துக்கு அழைத்துவரும் நேரத்தில் கூடுதல் பொலீஸ் பாதுகாப்பு வழங்க ஏற்பாடு செய்யலாம் என்று நீதிபதி கூறினார். (ஐ-3-5)

## ஞாயிறன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டுள்ளது.

எனவே, ஞாயிறு தினங்களில் 'டியூசன்' வகுப்புகளை நடத்துவதற்கு முற்றாகத் தடை விதிக்கப்படும். தடையை மீறி 'டியூசன்' வகுப்புகளை நடத்தும் ஆசிரியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் விஜித்த ஹேரத் கூறினார். (ஐ-க)

## இலங்கையில் தொடரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பு தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளது. போர் நிறுத்தத்தைக் காப்பற்றுவதிலும் அது கவனமாக உள்ளது. வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்தால் அது உக்கிரமற்ற வகையில் நடக்கும் ஒரு போரில் போய்முடியும்.

இலங்கை மக்கள் இப்போது நாட்டில் சமாதானம் ஏற்பட்டுவிட்டது என நம்புகின்றனர்.

கைச்சாத்திடப்பட்டுள்ளது வெறும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மட்டுமே, அது சமாதான ஒப்பந்தமாகாது.

தற்காலிகமான ஓர் அமைதிதான் இது. என்னாலோ அல்லது நோர்வே அரசினாலோ இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்திவிட முடியாது.

ஜனாதிபதி, அரசாங்கம், விடுதலைப் புலிகள், அரசியல் தலைவர்கள் மற்றும் நாட்டு மக்கள் ஆகிய அனைவருமே அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் மட்டுமே நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

இலங்கையில் அனுபவரீதியாகக் கண்ட விடயங்களையும், சேகரித்த தகவல்களையும், அரசின் நிலைப்பாட்டையும், விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்திடம் விளக்கவுள்ளேன். நாளை வெள்ளிக்கிழமை அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் சந்திக்கவுள்ளேன் - என்று நோர்வே அமைச்சர் விடர் ஹெல்கிஸன் கூறினார்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக அவரிடம் வினா எழுப்பப்பட்டது. இவ்விடயம் தொடர்பாகப் பேசுவதற்குத் தயாராக இருக்கிறார் என ஜனாதிபதி கூறியுள்ளார். ஆனால். அது பேச்சு மேசையில் எப்படி அமையும் என்பதுதான் கேள்வி.

அரசும், புலிகளும் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதில் உறுதியாகவே இருக்கின்றனர். பேச்சுக்குத் தயார் என்கின்றனர். இது மகிழ்ச்சியாகத்தான் இருக்கின்றது. ஆனால், பேச்சை ஆரம்பிப்பதில் பல நடை முறைச்சிக்கல்கள் காணப்படுகின்றன.

சரியோ, பிழையோ இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அடித்தளம இடப்பட்டுள்ளது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நோர்வே, சமாதானப் பணியிலிருந்து விலகிவிடாது. சமாதானப் பேச்சுக்கள் தொடரும் ஆனால், இப்போதல்ல. அதற்கு சிறிய காலம் எடுக்கும் - என்றும் கூறினார். (ஐ-க)

## ஹெல்கிஸனைச் சந்திப்பதற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மையாக எதிர்த்து வருகின்றது. நோர்வேயின் அனுசரணைப் பணியை அவ்வப்போது - பகிரங்கமாக - கடுமையாக - அது விமர்சித்து வருகின்றது.

அனுசரணைப் பணியின் ஒரு கட்டமாக அந்த நடவடிக்கைகளுக்குத் தலைமை வகித்துச் செயற்படும் நோர்வேப்பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் கொழும்பு வந்துள்ளார்.

அவர் கிளிநொச்சியில் புலிகளின் அரசியல துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும், கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் சந்தித்துப் பேசினார்; பல தரப்பினதும் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்.

அதேசமயம் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சிறிய கட்சிகளின் தலைவர்களையும் அவர் சந்திக்க விரும்பினார்.

அதற்கான தகவல்கள் கட்சிகளின் தலைவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் அவரைச் சந்தித்துப் பேசினர்.

எனினும், ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் நோர்வே அமைச்சரைச் சந்திப்பதை நாசுக்காகத் தவிர்த்துவிட்டன.

நேற்றுமுன்தினம் விடர் ஹெல்கிஸனை சந்தித்தபின்னர் ஐக்கிய இலங்கைக்குள் இடைக்கால நிர்வாகம் தொடர்பாகப் பேசத் தயார் என ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதியின் இக்கருத்து ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்றவற்றுக்குக் கடும் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது.

நோர்வே அமைச்சரை அக்கட்சிகள் சந்திக்க மறுத்ததற்கு அதுவும் ஒரு காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-க)

## படை அதிகாரிகளுக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமக்கு உரிய பணிப்புரை கிடைக்கவில்லை என்று அப்போது அரச சட்டவாதி நீதிமன்றத்தில் கூறியும் இருந்தார்.

இந்நிலையில் இந்த வழக்குகள் மீண்டும் நேற்று மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா முன்னிலையில் எடுக்கப்பட்டன.

அச்சமயம் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்த அரச சட்டவாதி செல்வி சுகந்தி கந்தசாமி அங்கு தெரிவித்ததாவது:-

இந்த வழக்குகளில் சம்பந்தப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் லயனல் பலகல்ல மற்றும் குடாநாட்டில் உள்ள சில படைமுகாம் அதிகாரிகள், சட்டமா அதிபருடன் தொடர்புகொண்டுள்ளனர்; தமது தரப்பு நியாயங்களை அவர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

இதையடுத்து சம்பந்தப்பட்ட படை அதிகாரிகள் சார்பில் ஆஜராக சட்டமா அதிபர் முடிவு செய்துள்ளார். எனவே, இந்த அதிகாரிகள் சார்பில் ஆஜராவதற்கான பதிலியை நீதிமன்றில் சமர்ப்பிக்கின்றேன்.

இந்த வழக்குகளில் அவர்கள் தரப்பின் பதில்களை - நியாயப்பாட்டை - சமர்ப்பிக்கக் கால அவகாசத்தை வழங்குமாறு கோருகிறேன் - என்றார்.

இச்சந்தர்ப்பத்தில் மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி றெபீடியஸ், கடந்த ஏப்ரல் மாதம் முதல் பல தடவைகள் மனுதாரர்கள் நீதிமன்றம் வந்து அலையவேண்டியுள்ளது என்றும் - அவர்கள் கூலிவேலைசெய்து அன்றாடம் வாழ்க்கை நடத்துபவர்கள் என்றும் - நீதிமன்றில் சுட்டிக்காட்டினார்.

தமது உடன்பிறப்புக்களை இழந்த நிலையில் தமது வாழ்க்கையை ஓட்டமுடியாதுள்ள அந்த வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களை அலைக்கழித்துக் கொண்டிருக்க நீதிமன்றம் இடமளிக்கக்கூடாது. படை அதிகாரிகள் வேண்டுமென்றே நீதிமன்றுக்கு வராமல் இருககிறார்கள். அதற்கு இடமளிக்காது விரைவாக வழக்கை நடத்தி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்க நீதிமன்றம் உதவவேண்டும் என்று அவர் வேண்டினார்.

படையதிகாரிகளின் பதில்களை விரைவாக நீதிமன்றில் சமர்ப்பித்து, செப்ரெம்பர் மாதம் வழக்குகளை விசாரணைசெய்ய ஏற்பாடு செய்யும்படி உத்தரவிட்ட நீதிபதி, வழக்குகளை செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார.

இந்த வழக்குகளில் எதிர்மனுதாரர்களில் ஒருவராகக் குறிப்பிடப்பட்டுள்ள பலாலி படைத தளபதிக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டபோதும் -

அப்படியான பதில் ஒன்று பலாலி படைத் தளத்தில் இல்லை என்று தெரிவித்து அந்த நோட்டீஸ் மீளவும் நீதிமன்றத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது என்று நீதிமன்றத்தின் கவனத்துக்கு அரச சட்டவாதியால் கொண்டு வரப்பட்டது.

மனுவில் பலாலி படைத்தளபதியின் பெயர் குறிப்பிடப்படாததால், அந்த நோட்டீஸ் ஏற்கப்படவில்லை. ஆதலால் பெயர் குறிப்பிட்டு திருத்திய மனுவை சமர்ப்பிக்கும்படி மனுதாரர்களின் சட்டத்தரணி கேட்கப்பட்டார். (ஐ-3-5)

## ராஜபக்ஷவுக்கு நீண்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிருஷாந்தி குமாரசாமி மற்றும் அவரது தாயார், சகோதரர் ஆகியோரைக் கொலை செய்த வழக்குகளில் மரணதண்டனை பெற்று வெலிக்கடைச் சிறையில் உள்ள லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ இந்த வழக்குகளில் முதலாவது எதிர் மனுதாரராவார்.

பலத்த பொலீஸ் பாதுகாப்புடன் யாழ். மேல் நீதிமன்றத்துக்கு அவர் அழைத்து வரப்பட்டு நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

இந்த வழக்குகளில் எதிர்மனுதாரராகத் தாம இருந்த போதும், கடந்த காலச் சம்பவங்கள் தொடர்பாகத் தாம் நீதிமன்றில் சாட்சியம் அளிக்க விரும்புகின்றார் எனவும் - அதற்காகச் சட்டத்தரணி ஒருவரை ஏற்படுத்த விரும்புகிறார் எனவும் -

அவர் கடந்த தவணையில் விடுத்த கோரிககையை நீதிமன்றம் ஏற்றிருந்தது.

நேற்று வழங்கு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டதும் அவர் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி தொடர்பான விவரம் அவரிடம் கோரப்பட்டது.

தாம் இன்னமும் சட்டத்தரணியை நியமிக்க வில்லை. எனவே, அதற்குத் தமக்கு மேலும் இருமாதகால அவகாசம் தேவை என்று அவர் நீதிபதியிடம் கோரினார்.

அதை ஏற்க நீதிமன்றம் மறுத்துவிட்டது.

சட்ட உதவி நிறுவனம் மூலம் சட்டத்தரணி ஒருவரை ஏற்பாடு செய்ய நீதிமன்றம் தயாராக இருக்கின்றது என்று அவரிடம் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு சட்ட உதவி நிறுவனம் மூலம் சட்டத்தரணி ஒருவரை நியமிப்பது தொடர்பாகத் தாம் தமது சட்டத்தரணியுடன் ஆலோசனை நடத்த வேண்டியுள்ளது என்று ராஜபக்ஷ தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு இவரை அனுப்பாது, அடுத்த 4ஆம் திகதி வரை யாழ். சிறைச்சாலையில் வைக்கும்படியும் -

அதற்குள் அவர் தமது சட்டத்தரணியுடன் தொடர்புகொண்டு பதிலை அடுத்த தவணையில் தெரிவிக்க வேண்டும் என்றும் - நீதிபதி உத்தரவிட்டார்.

அங்கு சமுகம் அளித்திருந்த சட்டத்திரணிகள் மன்றத்தின் யாழ். இணைப்பாளர் சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கத்திடம், சட்டத்தரணி ஒருவரை - எதிர்மனுதாரரின் மொழியில் பேசக்கூடிய ஒருவரை - நியமிக்கும்படி நீதிபதி கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் சிங்கள மொழியில் பேசக்கூடிய சட்டத்தரணிகள் இல்லை. அதனால் அநுராதபுரத்தில் உள்ள தமது மன்ற இணைப்பாளருடன் தொடர்புகொண்டு அதற்குத் தாம் ஏற்பாடு செய்து கொடுப்பார் என அவர் நீதிபதியிடம் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 4ஆம் திகதிக்குள் சட்ட உதவிமன்றம் ஊடாகவா அல்லது சொந்தமாகவா சட்டத்தரணியைத் தாம் ஏற்படுத்தப் போகிறார் என்ற விவரத்தை நீதிமன்றுக்கு ராஜபக்ஷ தெரியப்படுத்த வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிவான், வழக்கு விசாரணை செப்ரெம்பர் 6ஆம் திகதி ஆரம்பமாகும் எனத் தெரிவித்தார். (ஐ-3-5)


பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்

ஆரம்பம்

3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு

BERN, ZURICH

ஆகிய பெரு நகரங்களில்

லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்

தொடர்பு: 062 7974164 - 079 3344733

4665, OFTRINGEN, SWISS.

(33927)

BIT

SEMESTER I

விரிவுரைகள் ஆரம்பம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் மேற்படி தகவல் தொழில்நுட்பமாணி (வெளிவாரி) கற்கை நெறிக்கு கல்வியாண்டு 2004/2005 தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் 31.07.2004 காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

(சி/36362)(40-12-11) -IIS, Jaffna.

324, Palaly Road, Jaffna.

BIT

விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்

1st Semester

New Batches Commence on

Weekend: 01st August at 10.00 a.m

Weekday: 29th July at 04.30 p.m

ACS Modules Free

(ACS- Australian Computer Society)

Supported by UNDP/JRRP

புதிய பிரிவு

ஆரம்பம்: 01.08.2004 10.00 a.m.

| COURSE | DURATION | FEES |
| --- | --- | --- |
| Diploma in Ms Office | 3 Months | 1800.00 |
| Diploma in Internet Technology | 3 Months | 3000.00 |
| Diploma in Hardware Engineering | 4 Months | 3750.00 |
| Diploma in Desk Top Publishing | 3 Months | 2400.00 |

★மிகக் குறைந்த கட்டணம்.

★அதிநவீன வசதிகளுடன் கூடிய கற்பித்தல் முறைமை.

★தவணை முறையிலான கட்டண வசதி.

மேலதிக விவரங்களுக்கு: இயக்குநர் IBMS

(சி-36038) # 410,K.K.S. Road, Jaffna.

பிறைற்றின் சாவகச்சேரி

A/L 2005

இந்துநாகரிகம்: திரு.ஜோதீஸ்வரன்

சனி,ஞாயிறு 2.00 p.m.

அளவையியல்: S.R.J.சுதன்

விஞ்ஞான வகைமீடு II சனி, ஞாயிறு 1 p.m. (ப.நே)

வகுப்புகள் நடைபெறுகின்றன. (34668)(40)

Computing for Kids

சிறுவர்களுக்கான கணனிப் பயிற்சி விடுமுறைக் கால பயிற்சிநெறி ஆரம்பமாகவுள்ளது.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

Sky Computers (Pvt)Ltd.

89, Kandy Road,

Chundikuli,

Jaffna.

(36616)(40-11-12)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.